# கும்பம்

## சேனையூர்

ஒரு பண்பாட்டியல் குறிப்பு



பாலசுகுமார்

அனாமிகா வெளியீடு

# கும்பம்

## சேனையூர்

---

## ஒரு பண்பாட்டியல் குறிப்பு

பாலசுகுமார்

அனாமிகா

## நூல் விபரம்


நூல் - **கும்பம்**

சேனையூர்

ஒரு பண்பாட்டியல் குறிப்பு

ஆசிரியர் - பாலசுகுமார்

பதிப்புரிமை - பிரமிளா பாலசுகுமார்

முதற்பதிப்பு - ஒக்டோபர் 2015

வெளியீடு - அனாமிகா வெளியீட்டகம்

, அச்சுப்பதிப்பு - வணசிங்கா பிரிண்டர்ஸ்

பக்கங்கள் - 60

விலை - 200/-

நூல் தயாரிப்பு - வடிவமைப்பு

வி. மைக்கல் கொலின்

(ஆசிரியர் - மகுடம்)

# உள்ளே......

பக்க எண்

## வாழ்த்துச் செய்திகள்


- இராமகிருஷ்ணமிஷன் சுவாமி (iv)
- பிரதேச செயலாளர் (v)
- அரசாங்க அதிபர் (vi)
- கொழும்பு நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் (vii)
- கிழக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் (viii)


## ஆக்கங்கள்


- கிரியின் கதை 01
- சிறுவர் உரிமை 04
- சிறுவர்களும் உளநலமும் 11
- நித்தில முத்தாவோம் (கவிதை) 15
- மாணவர் இடைவிலகல் 17
- சிறுவர் இலக்கியம் 22
- சிறுவர் இல்லங்களும் அவற்றின் தரங்களை மேம்படுத்தலும் 26
- சிட்டிற்கு ஏன் சிறை (கவிதை) 29
- பிள்ளைகளைப் பராமரிக்கும் முறைகள் 30
- ஆரோக்கியம் (கவிதை) 33
- சிறுவர் தத்தெடுப்பு 34
- எம் வாழ்வை உயர்த்திடுங்கள் (கவிதை) 36
- பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்குவோம் 37
- குடும்பச் சூழலும், சிறுவர்களும் 42
- சுனாமிக்குப் பிந்திய இலங்கையில் சமூகப் பராமரிப்பு நிலையங்களின் நிர்வாகம் 46
- சமூகப் பராமரிப்பு நிலையத்தினுடைய நோக்கங்களும் செயற்பாடுகளும் 47
- நன்றியுரை 52

**ஸ்ரீ இராம கிருஷ்ண மிசன்**
**சுவாமி அஜராத்மானந்தா அவர்களது**

# ஆசிச்செய்தி

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" ஒரு நாட்டின் பெறுமதிமிக்க சிறுவர்கள் என்பதனால், அனைத்து நாடுகளும் சிறுவர் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. இதன் ஒரு வடிவமே "சர்வதேச சிறுவர் தினம்" October 1ம் திகதி சர்வதேசம் எங்கும் கொண்டாடப்படுகின்றது.

இத்தினத்தை முன்னிட்டு மண்முனைப்பற்று பிரதேச செயலகம் சிறுவர் மலர் ஒன்றினை வெளியிடவிருப்பது பாராட்டக் கூடிய ஒரு விடயமாகும். விழாவைக் கொண்டாடுவதோடு, அதனை ஆவண மாக்கி மலராக வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சிறுவர்கள் எதிர்கால சிற்பிகளாவர். ஆகவே அவர்களது உடலும், உள்ளமும், அறிவும் முழு வளர்ச்சி பெறத்தேவையான ஊக்கத்தையும் ஒத்தாசையையும் நாம் வழங்க வேண்டும். "ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அளவற்ற சக்தி மறைந்திருக்கின்றது" என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். சிறுவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தத் தேவையான சூழலை ஏற்படுத்து வது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மன நிறைவு கொள்கின்றேன். இச் சிறப்பான கைங்கரியத்தில் இறங்கி உள்ள பிரதேச செயலாளர், நிர்வாகிகள் மற்றும் மலர்க்குழுவினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். இவர்கள் அனைவருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடவுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் எனது அன்பும் ஆசியும் என்றும் உண்டு.

**சுவாமி அஜராத்மானந்தா**
இராமகிருஷ்ணபுரம்,
கல்லடி, மட்டக்களப்பு.

## பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

மண்முனைப்பற்று சிறுவர் கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டு பரிணாமமாக சிறுவர்களின் முக்கியத்துவத்தை உணர்வூட்டும் வகையில் ''விழி'' சிறப்பு மலர் வெளிவருவது பாராட்டிற்குரிய விடயமாகும்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவிதியினை நிர்ணயிக்கும் தலைவர்களாக மாறுகின்றனர். இவர்களது இயலளவுகளை முதிர வைப்பது வளர்ந்த சமுதாயத்தின் கடமை ஆகும். இந்த வகையில் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் இவ்வருட (2008) கருப்பொருளான ''பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்குவோம்'' என்பதை மையப்படுத்தியதாக இவ்வருட வேலைத் திட்டங்கள் அமைந்துள்ளன.

சிறுவர் உரிமைகள் பற்றியும் சம வயதில் அவர்களது பாதுகாப்புத் தொடர்பாகவும் பல உறுப்புரைகள் நடைமுறைக்கு வந்தபோதிலும் அவற்றைச் செயற்படுத்துவதில் சமகாலச் சூழ்நிலைகள் பாரியளவு எதிர்மறைத் தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ் அசாதாரண சூழலில் சிறுவர் பாதுகாப்பின் அவசியம் மிகவும் இன்றியமையாதது மாத்திரமற்றி, கட்டாயத் தேவையாகவும் அமைகிறது.

காலத்தின் கட்டாயத் தேவையைக் கருத்திற் கொண்டு ''விழி'' விழிப்புணர்வூட்டவருவது மகிழ்ச்சியான விடயமாகும். இப் பணியைச் சிறப்பாக நிறைவேற்ற ஒத்துழைத்த சி. சக்திநாயகம் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழு, பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கிய வளப் பேராளர்கள், நிதியுதவி வழங்கிய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

**கலாநிதி.சி.அமலநாதன்**
*பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழுத் தலைவர்,*
மண்முனைப்பற்று.

## அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

"சிறுவர்களே நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக மிளிர்வதால் சிறுவர் பற்றிய விழிப்புணர்வு இன்று உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக ஐ.நா. சபையின் சிறுவர் உரிமை சாசனத்தைக் குறிப்பிடலாம். இந்த வகையிலேயே சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் 01ம் திகதி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இதற்கமைவாக மண்முனைப்பற்று பிரதேச செயலக சிறுவர் கண்காணிப்புக் குழுவும் சிறுவர் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக சிறுவர் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது பாராட்டுதலுக்கு உரியது. இதற்கு எனது மனம் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறுவர் தம் உரிமைகளை உலகறியச் செய்து சிறுவர்களின் எதிர்காலத்தை வலுப்படுத்தச் செய்யும் சீரிய பணியின் ஒரு கட்டமாக வெளியிடப்படவிருக்கும் சிறுவர் சஞ்சிகையானது தரமான ஆக்கங்களைத் தாங்கி வந்து எதிர்வருங்காலங்களில் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.ஆர்.கேதீஸ்வரன்**
அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

# Message from the Commissioner of Probation and Child Care Services

It is with much pleasure that I make my contribution to your souvenir to commemorate universal Children's Day in the Manmunaipattu Divisional Secretariat.

It is clear that although adults are very concerned about the well – being of the Children. A Suitable environment has still not yet been created in our society to listen to the children. It is important adult should be willing to listen to the children under any circumstance. In order to cultivate confidence and strengthen their young minds.

Children who are isolated from their family. School, and society are faced with a lot of stress. In the contest of the prevailing comparative Education system, the child is made face, The parents should be prepared to understand and consider child's point of view. There fore children should be directed to gain extra knowledge apart from the usual curriculum.

It is the duty of parents to refer their children to the special children's Club societies which have been setup to put them on the correct path in the society and encourage them to think carefully and widely. Time has come to consider the same.

I wish you every success in all the fields of social activities relating children organized by the divisional Secretary and Child Right Promotion Officer attached to the Divisional Secretariat, Manmunaipattu.

**D.M.S.Abayagunawardana**
Commissioner
Probation and Child Care Services.

# MASSAGE FORM THE COMMISSIONER OF EASTERN PROVINCE

As the Commissioner of Probation and child care Services in Eastern Province it is a great pleasure for me to issued a greetings to the Magazine issued by the Divisional Secretary Manmunaipattu on world children's day.

Unlike in the past, children are facing many Problems today. They are abused by elders on three aspect i.e. Physically, Mentally and Sexually. They are being exploited by elders by giving employment. Under the Child rights Convention, every child under the age of 14 must go to school for education, but parents of some children do not take much interest or take responsibility of education of their children. Because of this situation some children have to forego their childhood, to take fathers responsibility to look after their family. To overcome these Situations, I thinks, it is necessary to give awareness to the society about its responsibility over the child rights. To Publishing periodicals like this magazine will be an immense benefit to impart the knowledge and change the attitude of the society.

Finally, I thank the Divisional Secretary Manmunaipattu and Mrs.K.Retnajothy (Probation Officer), Mrs.V.Shandrakanthan (Programme Assistant Probation), Mr.C.Sagthinayagam (Child Rights Promoting Officer) for the efforts taking by them to publish this magazine.

**N.P.K.Nelumdeniy**
Commissioner
Probation & Child Care Services.

கிரிக்கு வயது பத்து. துடிப்பும், கெட்டித்தனமும் நிறைந்த சிறுவன். நேற்றுத்தான் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடந்து முடிந்தது. அவன் நிச்சயம் சித்தி பெறுவான் என்று அனைவரும் நம்பினர்.



இனி என்ன.... விளையாட்டும், கும்மாளமும் தான் கிரிக்கு. நண்பர்களுடன் பந்தடிக்கச் செல்ல வேண்டும்

# கிரியின் கதை

Dr.திருமதி.அஞ்சலா அந்தனி
குழந்தை நல நிபுணர்
போதனா வைத்தியசாலை,
மட்டக்களப்பு

மிருகங்களுடன் விளையாடுவதும் அவனுக்கு விருப்பம் தான். இன்றும் அப்படித்தான் வீட்டு வாசலில் வந்து நின்ற மண்ணிற நாயுடன் விளையாடத் தொடங்கினான். அந்த நாயை அவன் முன்பு பார்த்ததில்லை. ஒரு தடியை எடுத்து அதற்குமுன் நீட்டினான். அவ்வளவுதான், அது வெறித்தனத்துடன் பாய்ந்து அவன் முகத்தைக் கவ்வியது. "ஐயோ அம்மா!" கிரி அலறினான்.

பிறகு நடந்தது என்ன? கடித்த இடத்தை சவர்க்காரமிட்டுக் கழுவினர் பெற்றோர். "அந்த நாய்க்கு விசர்" என்று அங்கு வேடிக்கை பார்க்க வந்த சிலர் கூறினர். வேறு சிலர் "அப்படியில்லை" என்றனர்.

கிரி அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். ஏற்பு வலிக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டது. பின்பு அம்பியுலன்சு மூலம் மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான்.

அங்கு மயக்க மருந்து கொடுத்து, சத்திர சிகிச்சைக் கூடத்தில் காயம் சுத்தமாக்கப்பட்டது. பின்பு விசர்நாய்க்கடி மருந்து ஏற்றப் பட்டது. மேலும் ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டிய கால அட்டவணை அவனுக்கு வழங்கப்பட்டது.

எவ்வளவு வேதனை....., எத்தனை அலைச்சல் கிரி சிந்தித்தான்...... விசர்நாய்க்கடி ஒரு கொடுர மான வியாதி. அது ஏற்பட்டால் தப்பவே முடியாது. வைத்தியசாலையிலும்கூட ஊசி மருந்துகள் தவறாது கொடுக்கப்பட வேண்டிய அவசியம் அவனுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டது.

"இந்த நாய்க்கடியை நான் தவிர்த்திருக்க முடியாதா?"

இந்தக் கேள்வி உங்கள் மனதிலும் எழுகிறதா?

## இதோ சில ஆலோசனைகள் :

1. நாய்களையோ எந்த மிருகத்தையோ கோபமூட்டக்கூடிய செயல் களில் ஈடுபடக்கூடாது.
   (உ+ம்) கல்லெறிதல், அதன் உணவுத் தட்டை சாப்பிடும்போது பறித்தல், வாலை இழுத்தல், உதைத்தல், பட்டாசு கொளுத்தியெறிதல்.

2. தாம் வளர்க்கும் நாய்கள்/ பிராணிகளுடன் மட்டுமே விளையாட வேண்டும். ஏனையோரின் செல்லப் பிராணிகளுடன் விளையாடுவ தெனில் உரிமையாளரின் அனுமதியைப் பெறவேண்டும்.
   வளர்ப்போரற்ற விலங்குகளுடனும், குரங்கு போன்ற ஊருக்குள் திரியும் காட்டு விலங்குகளுடனும் விளையாடவோ அவற்றுடன் சேட்டை செய்யவோ கூடாது.

3. எந்த மிருகத்திற்கும் அருகில் திடீரென்று செல்ல வேண்டாம். அவை பயந்து கடித்து விடக்கூடும்.

4. எதிர்பாராத விதமாக ஒரு நாயைச் சந்தித்தால் அதனை நோக்கியோ, விலகியோ ஓட வேண்டாம். சாதாரணமாக நகருங்கள்.

5. காயப்பட்ட விலங்கொன்றைக் கண்டால் பெரியோரின் உதவியின்றி அதன் அருகில் செல்லவோ அதனைத் தொடவோ வேண்டாம்.


6. உங்கள் செல்லப் பிராணியான நாய்க்கு, கைகளில் வைத்து உணவு கொடுப்பதெனில், விரல்களைச் சேர்த்து வைத்துக் கொடுங்கள். நாய்க்கு சிலவேளைகளில் எது உணவு, எது விரல் என்று தெரியாமல் கடித்து விடக்கூடும்.

7. மிகவும் சாந்தமான நாய்கள்/விலங்குகள் கூட கடிக்கக் கூடும் என்பதை எப்போதும் மனதில் வைத்திருங்கள். ஆகவே அவற்றை கேலி செய்யவோ அவற்றை ஆத்திரமடையச் செய்யும் கருமங்களில் ஈடுபடவே கூடாது. அவை விலங்குகள் தானே, மனிதர்கள் அல்லவே...

அத்துடன் செல்லப் பிராணிகளை வளர்க்கும் நீங்கள் அதற்குரிய தடுப்பூசிகள் ஏனைய மருந்துகள் என்பவற்றை மிருக வைத்தியரிடம் காட்டிப் பெற்றுக் கொள்ளத் தவறாதீர்கள்.

**இது விசர்நாய்க்கடி வியாதியால் 19.09.2008 அன்று மரணித்த சிறுவனின் நினைவாக எழுதப்பட்டது.** ✹





# சிறுவர் உரிமை

திரு.த.சிறீஸ்கந்தராஜா
உதவித் தொழில் ஆணையாளர்
மட்டக்களப்பு.

உலகின் எதிர்கால சிற்பிகள் என்றும், நாட்டின் கண்கள் என்றும், பாரின் தூண்கள் என்றும் வர்ணிக்கப்படுகின்றவர்கள் யார்? சிப்பிக்குள் முத்தாக, கண்ணுக்குள் மணியாக நாம் போற்றிப் பாதுகாத்து வளர்க்கின்ற நம் சிறார்களே. எந்த ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலும் திரும்பிப்பார்க்க நினைக்க வைக்கும் இனிமையான பருவம் சிறார்ப்பருவமே. தான் அனுபவித்து இன்புற்ற இப் பருவத்தை எந்த ஒரு சிறாரும் அனுபவிக்க வைப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் தலையாய கடமையாகின்றது. ஆனால் நம் மத்தியில் எத்தனையோ சிறார்கள் இப்பருவத்தின் இனிமையைத் தொலைத்து தொலையாத துன்பத்தில் உழல்கின்றதை நம் கண்கள் ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த அவலநிலையைப் போக்க சர்வதேச தொழிலாளர் சபை (ILO), நம் அரசாங்கம் ஆகியன சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு காலத்திற்குக்காலம் பல வகையான சட்டங்களையும், பிரகடனங்களையும் முன்வைத்துவந்துள்ளன. இந்தவகையில் நாம் முதலாவதாக சிறுவர் உரிமை பற்றி சற்று உற்று நோக்குவோம். சிறுவர் உழைப்பு, சிறுவர் உரிமை பற்றிய பட்டயத்தில் சிறுவர் உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. “பொருளாதார ரீதியான சுரண்டலில் இருந்தும், ஆபத்தான தொழில் புரிதலிலிருந்தும் அரசாங்கத்தினால் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் சிறுவர்களின் ஆரோக்கியத்திற்கோ அல்லது உடல், உள, கல்வி, மனித விழுமியங்கள், சமூக அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கும் எந்த செயலில் இருந்தும் பாதுகாப்பளிக் கப்பட வேண்டும்.”

சிறுவர் உரிமை பற்றிய பிரகடனத்தையும், சிறுவர் ஆண்டையும் சர்வதேச ரீதியில் வலுப்படுத்திய அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையாகும். அதன் பின்பே சர்வதேச சமூகத்தில் சிறுவர் உரிமை சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்பட்டது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்தவகையில் சிறுவர் உரிமை தொடர்பாக சர்வதேச ரீதியில் முன்வைக்கப் பட்டுள்ள சில பிரகடனங்கள் பின்வருமாறு. வரலாற்றின் அடிப்படையில் சிறுவர் உரிமை பற்றி முதன்முதல் சர்வதேசரீதியில் எழுந்த பிரகடனம் 1924ஆம் ஆண்டில் சிறுவர் உரிமை தொடர்பான ஜெனிவா பிரகடனமே. இதனையடுத்து 1948ல் ஐ.நா மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டில் ஐ.நா.வால் சிறுவர் உரிமை தொடர்பாக வெளியிடப்பட்ட பிரகடனம் ஜெனிவா பிரகடனத்திலும் சிறந்த பிரகடனமாக அமைந்தது. அப்பிரகடனம் வலியுறுத்துவது "மனிதகுலம் சிறுவர்களுக்குரிய இடத்தை வழங்குவதற்குரிய கடப்பாடுடையதாகும்." 1966 ஆம் ஆண்டின் குடியியல் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச சாசனம் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1973ஆம் ஆண்டின் சிறுவர்களைச் சேவையில் அமர்த்தும் கீழ் எல்லை வயது தொடர்பான சாசனம் இல:138 வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும் 1979ல் சிறுவர் ஆண்டைக் கொண்டாடும்வரை இப்பிரகடனங்களில் உள்ளடக்கப்பட்ட காரணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் அரசுகள் அற்ப ஆர்வத்தினையே காட்டிவந்தன. இதன்படி நோக்கும்போது 1979ல் உலக சிறுவர் ஆண்டு பிரகடனமானது. நவீன காலத்தில் சிறுவர் தொடர்பான அதி உன்னதமானதும் ஆழமானதுமான செயற்பாட்டினை மேற்கொள்வதற்கான வழிகாட்டியாக அமைந்தது எனலாம். இதன் பின்பு 1989ம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் சிறுவரை அபாயகரமான வேலையில் அமர்த்தும் கீழ் எல்லை வயது தொடர்பான சாசனம் இல: 182 நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு சர்வதேச தொழில் தாபனம் காலத்திற்குக் காலம் சிறுவர் உரிமையினை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சாசனங்கள் இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதன் காரணமாக சர்வதேச சட்டங்களில் உள்ள சிறுவர் உரிமைகளை எமது நாட்டு சிறுவர்களுக்கும் உரித்தாக்குவது எமது கடமை ஆகும். இவ்வாறு சிறுவர் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக

எமது நாட்டின் அரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலமாக நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினுள் சில.

01. 1841ஆம் ஆண்டின் 4ம் இலக்க நாடோடிகள் கட்டளைச் சட்டம்

02. 1889ஆம் ஆண்டின் 19ம் இலக்க தாபரிப்பு கட்டளைச் சட்டம்

03. 1939ஆம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர் இளைஞர் கட்டளைச் சட்டம்

04. 1942ஆம் ஆண்டின் 45ம் இலக்க தொழிற்சா லைகள் கட்டளைச் சட்டம்

05. 1954ஆம் ஆண்டின் 19ம் இலக்க கடை அலு வலக ஊழியர் (வேதனம்) வேலை ஒழுங்குபடுத்துதல் சட்டம்

06. 1956 ஆம் ஆண்டின் 47ம் இலக்க பெண்கள் இளம் வயதினர் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டமும் பின்பு அச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தமும்.

07. 1956ஆம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர் இள வயதினர் சட்டம்.

08. 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப் புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை உள் ளடக்கிய 3வது அத்தியாயம்.

09. 1979ஆம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்ட மும் அதற்கான 1955 ஆம் ஆண்டின் இலக்கம் 20, 1998 ஆம் ஆண்டின் இலக்கம் 28,29 திருத்தச் சட்டங்களும்.

10. 1998 ஆம் ஆண்டின் 1ம் இலக்க கட்டாயக் கல்விச் சட்டம்.

11. 1998 ஆம் ஆண்டின் 22ம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1998ஆம் ஆண்டின் 29ஆம் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை.

12. 1998 ஆம் ஆண்டின் 30ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்.

இலங்கை சட்ட ஏற்பாடுகளின் கீழ் சிறுவர் எனப்படுபவர் எந்த வயதெல்லைக்கு உட்பட்டவர் என்னும் தெளிவின்மை காணப்படுகிறது. காரணம் இலங்கைச் சட்டங்கள் பல இடங்களில் பல விதமான வயதெல்லை குறிப்பிடப்பட்டுள்ளமையே. ஐ.நா. சபையினால் 18 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் யாவரும் சிறுவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும் சிறுவர் என்னப்படுவோர் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது இலங்கைத் தொழில் சட்டங்களில் பொதுவான கருத்தாக அமைகின்றது. இலங்கையிலும்சரி சர்வதேச ரீதியிலும்சரி சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற வண்ணமேயிருக்கின்றது. இந்தவகையில் சிறுவர்களுக்கெதிராக இழைக்கப் படுகின்ற துன்புறுத்தல்கள் சிலவற்றை இங்கு உற்றுப்பார்ப்போம் அவை, சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் புறக்கணிப்பு, சிறுவர் உழைப்பு, பாலியல் துஷ்பிரயோகம், வீதியோரப் பிள்ளைகள், சுவீகரிப்பு, ஊனமுற்ற பிள்ளைகள், சட்டத்துடன் பிணக்குள்ள பிள்ளைகள், குடும்பப் பிணைப்பற்ற சிறுவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிறுவர்கள், சித்திரவதை, சுதந்திரத்தை மறுத்தல், போதைப் பொருட் துஷ்பிரயோகம் போன்ற விடயங்கள் சிறுவர் உரிமை மீறலாகும்.

இவ்வாறான கொடுமைகளுக்கு எதிரான பல சட்டங்கள் நடைமுறையில் இருந்த போதிலும் இக்கொடுமைகள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. இதனால் ILO, WHO, UNESCO, UNICEF போன்ற ஐ.நா. விசேட சிறுவர் நிலையங்கள் பல செயற்பாடுகளை தேசிய, சர்வதேச ரீதியில் மேற்கொண்டு வருவதைக் காணலாம்.

மேலும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் பற்றிய அண்மைக்கால செயற்பாடுகள் சிலவற்றைக் கவனிப்போமானால் அவை,

- 1993 இல் சமூகநலத் திணைக்களத்தின் ஆதரவுடன் இலங்கையில் நிறுவனங்களின் பொது மன்றம் தாபிக்கப்பட்டது. இது 15 அரசசார்பற்ற நிறுவனங்களைக் கொண்டுள்ளது.
- சில அரசசார்பற்ற நிறுவனங்கள் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள், பிரச்சாரம், அதிகாரப் பரவலாக்கம், சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருதல் போன்றவற்றில் செயற்படுகின்றன.
- மேலும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நீதிமன்ற வழக்குகளைக் கண்காணிப்பதோடு நீதிமன்ற வழக்குகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் பராமரித்து வருகின்றன.
- 1994 இல் மனித உரிமைகள் நிலையம் தேசிய கல்வி நிறுவனத்துடன் சேர்ந்து சிறுவர் உரிமைத் தொடரினை

பாடத்திட்டத்தில் புகுத்தியது. பாடத்திட்ட மாற்றத்தோடு சிறுவர் உரிமை பற்றி ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கவும் எத்தனிக்கின்றது.

✦ கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் இணைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆய்வுநிலையம் எனப்படும் கல்வி நிறுவனம் சமுதாயத்திற்கும், பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்குமான கல்வி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இது அதிபர்களுக்கும், தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும், 25 பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கிறது. வெளிக்கள உத்தியோகத்தரின் வழிகாட்டலின்கீழ் சமுதாயத்தில் மனித உரிமைகள் (சிறுவர் உரிமை உட்பட) மீறப்படுவதை இவர்கள் தேடி இனங்காண்பர்.

✦ சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் பெருவாரியான ஆதரவைத் திரட்டுவதற்குப் பாராளுமன்ற உபகுழு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் கீழ்வரும் விடயங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டால் சிறுவர் உரிமை மேலும் பாதுகாக்கப்படலாம். அவை,

✦ மிகப் பிரதானமான வழிகளில் ஒன்று சிறுவர்களின் ஓம்பூட்ஸ்மன் அல்லது தேசிய செயற்குழு ஒன்று அல்லது தானிகர் போன்ற வடிவில் அமையும் ஒரு தேசிய உறுப்பை உருவாக்குதல் இத்தகைய ஒரு தேசிய அமைப்பு சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளிலும் கண்வைத்துச் சிறுவர்கள் மீதான அக்கறைக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய விருத்திக்கு சைகை செய்வதோடு மாற்றங்களையும் தேடும்.

✦ அரசாங்கம் சமவாயத்தின் ஏற்பாடுகளைச் சிறுவர்களும், வயது வந்தவர்களும் நன்றாக அறியும்படியும் செய்ய வேண்டும். ஒரு தேசிய அமைப்பு உதவியாக அமையலாம். சிறுவர் உரிமைகளை முன்னேற்றுவதற்கும், மறுப்பதை கண்காணிப்பதற்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும், சமூகம் சார்ந்த நிறுவனங்களும் ஒருங்கிணைந்து பங்காற்ற வேண்டும்.

✦ இலங்கைச் சிறுவர்களுக்கான வேலைத் திட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமானால் மாகாண மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் காணப்படும் தேவைகளுக்கும், அபிலாசைகளுக்கும் ஏற்ப திருத்தியமைக்கப்பட வேண்டும். இம்மட்டங்களில் கண்காணிப்பு நடைபெற்று மத்திய மட்டத்தில் தேசிய கண்காணிப்புக் குழுவினால் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

✦ சிறுவர்களிடமிருந்து அவர்கள் பற்றிய ஆலோசனைகள் பெறப்பட வேண்டும். தமது விவகாரங்களில் சிறுவர்கள் குரலெழுப்ப பாடசாலைகளின் மனித உரிமைகள் கற்கைநெறி ஒரு சாதனமாகப் பயன்படுத்தலாம். அத்துடன் உரிமைகள் மீறப்படும் சிறுவர்களுக்கு பிரச்சாரம் மூலம், நடைமுறை உதவிமூலம் துணையாக அமையலாம்.

✦ சிறுவர் உரிமைகளை முன்னேற்றுவதற்கும், கூடிய பயன்தரக்கூடிய முறையில் அச்சையும், செவிப்புல, கட்புல சாதன ஊடகத்தையும் பயன் படுத்தலாம். தனிப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும்பொழுது ஒரு பிரத்தியேக பிரச்சினையின் அம்சங்கள் எடுத்தாளப்படவேண்டும்.

✦ சமவாயத்தின் ஏற்பாடுகள் ஒரு திட்டமான தேசிய செயற்திட்டமாக மொழிபெயர்க்கப்பட வேண்டும். இது சிறுவர் பிரச்சினைகளை இனங்கண்டு சிறுவர் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளில் அக்கறை கொள்வதோடு தற்பொழுது நிலைத்திருக்கும் கொள்கைகள், நடைமுறைகள், சாசனங்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்துவிடப்பட்ட வெற்றிடங்களை நிர்ணயித்து ஒரு தகுந்த நிகழ்ச்சி நிரலை உருவாக்குதலை உள்ளடக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளையும் அரசு அமுலாக்கும்பட்சத்தில் சிறுவர் உரிமை மீறலை பெருமளவு கட்டுப்படுத்தலாம்.

மேலும் சமூகத்தில் பாரியதொரு பொறுப்பை வகிக்கும் மக்களாகிய நீங்கள் உங்கள் கண்பார்வையில் எந்த ஒரு சிறாராயினும் உரிமைகளை இழந்து துன்புறுத்தப்படுவதை அவதானிக்குமிடத்து செய்ய வேண்டிய விடயம்,

**சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு :**

அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும்

**சிறுவர் துன்புறுத்தலுக்கு :**


சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடமும்

**சிறுவர் வேலைக்கமர்த்துதலுக்கு :**

தொழில் திணைக்களத்திலும், நன்னடத்தை அதிகாரியிடமும், மாவட்ட மட்டம், பிரதேச மட்டத்திலும் சிறுவர் உரிமை தொடர்பான குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதால் அங்கும் தொடர்பு கொண்டு உங்கள் எதிர்கால சந்ததி யின் இனிமையான இளமைப் பருவத்தை மீட் டுக்கொள்ளுங்கள்.

**உசாத்துணை நூல்கள் -**

- சிறுவர் உரிமைகள் இலங்கை திறந்த பல்கலைக்கழக வெளியீட்டு நூல்
- சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை தடுப்பது தொடர்பான சட்டக் கைந்நூல்.



சிறுவர் எமது வாழ்விலே - போதை அழிவின் பாதை எனக் கொள்வோம்.



# சிறுவர்களும் உளநலமும்

Dr.S.Paramakurunathan
MBBS (SL) Dip. Psychiatry
Teaching Hospital - Batticaloa.

"இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயம்" அச்சிறுவர்களை ஆரோக்கியமான உடல், உள நலத்துடன் உருவாக்கினால்தான் நாளைய சமுதாயமும் ஆரோக்கியமாக இருக்கும். ஒரு சிறுவனையோ, சிறுமியையோ எடுத்துக்கொண்டால், பச்சிளம் குழந்தைப் பருவத்தில் இருந்து (Infant) கட்டிளம் பருவத்தை (Adolescent) அடையும்வரை பல வகையான வளர்ச்சிப்படிகளையும், உளநல விருத்தியையும் அடைகின்றனர். ஆகையால், ஒவ்வொரு பருவத்திற்குமான சாதாரண நிலைமையையும், அசாதாரண நிலைமையையும் நாம் அறிந்து கொண்டால்தான் ஒவ்வொரு சிறுவனினதும் உளநலத்தைப்பேணி நல்லதொரு மனிதனை எங்கள் சமுதாயத்தில் உருவாக்க முடியும்.

ஒரு பிள்ளையின் முதல் வருட வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், இயக்க விருத்தியும் (Motor Development) சமூகத் தொழிற்பாடும் (Social Functioning) வேகமாக வளர்ச்சியடைகிறது. ஒரு குழந்தை பிறந்து மூன்று கிழமைகளில் முகங்களைப் பார்த்து சிரிக்க ஆரம்பிக்கின்றது. பின்னர் ஆறு மாதங்களில் அந்தக் குழந்தை குறிப்பாகத் தாயின் முகத்தைப் பார்த்துச் சிரிக்கின்றது. (Selective Smiling) எட்டு மாதங்களில் அன்னியர்மட்டில் பயம் ஏற்படுகின்றது. தொடர்ந்து தாயின் பிரிவில் ஏக்கம் அடைகின்றது. Bowlby (1980ல்) என்பவர் இதைப்பற்றி (பெற்றோர்களுக்கான நெருக்கத்தையும், உணர்ச்சி

பூர்வமான பிணைப்பையும்) தெளிவாகக் கூறுகின்றார். ஒரு வருட இறுதியில் அம்மாவுடனும், முன் கவனிப்பாளருடனும் நெருக்கமான, பாதுகாப்பான உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ளும்.

மேலும் ஒழுங்கான நித்திரையும், உணவு உண்ணும் முறையையும் ஏற்படுத்திக் கொள்ளும். ஆகையால் இந்தக் கால கட்டத்தில், பெற்றோர்களின் பிரிவு அக் குழந்தையின் உள நலத்தைப் பெரிதும் பாதிக்கும். மேலும் மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கட்டங்களிலும் ஏற்படும் த்டை அக்குழந்தையின் உளத்தைப் பெரிதும் பாதிக்கின்றது.

இரண்டு வருடங்களில், ஒரு பிள்ளை விரைவான வளர்ச்சியை அடைகின்றது. பிள்ளைகள் அவர்கள் பெற்றோர்களை மகிழ்விக்க விரும்புகின்றார்கள். பெற்றோர்கள் அவரக்ள் மகிழ்ச்சியை ஏற்றுக் கொண்டு, மகிழ்வாக பிள்ளைகளுடன் உறவாடினால் அவர்கள் உள ஆரோக்கியம் அடைகின்றார்கள். தாயின் நடத்தை பிள்ளையைப் பெரிதும் பாதிக்கின்றது. மேலும், இந்தப் பிள்ளைகள் ஆராய்வுகள் அல்லது ஏதாவது முயற்சி செய்யும் போது அடம்பிடிக்கத் தொடங்கு கிறார்கள். இதை Temper Tantrum எனக் கூறப்படுகின்றது. ஆனால் இந்த Temper Tantrum நீண்டகாலத்திற்கு நீடிப்பதில்லை. அக்குழந்தை தனது சில செயற்பாட்டிற்கான வரையறையைக் கற்றுக் கொள்கின்றது. இதன் மூலம் Temper Tantrum படிப்படி யாகக் குறைகின்றது.

அடுத்து, முன்பள்ளிப் பருவத்தில் (Pre - School Years) இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரை, அந்தப் பிள்ளை மிகுந்த மூளை விருத்தியையும் (Intellectual ability) மொழித் திறனையும் (Complexity of Language) கொண்டிருக்கின்றது. இதற்கான சந்தர்ப்பங்களும் தூண்டுதல்களும் கிடைக்காதபோது இந்தப் பிள்ளையின் விருத்தி / திறன் குன்றுகிறது, மொழித்திறன் அற்று விளங்குகிறது. மேலும் Temper Tantrum என்பது படிப்படியாகக் குறைந்து பாடசாலை செல்லுமுன், மறைந்து விட வேண்டும். பெற்றோர்களினதும், சகோதரர்களினதும் நடத்தைகள் சில சமயங்களில் இந்த Temper Tantrum

எனப்படும் அடம்பிடிக்கும் தன்மையை அதிகரிக்கலாம். அந்த வேளையில், அவர்கள் அடம் பிடிக்கும் காரணத்தைக் கவனியாது விட வேண்டும். அதைக் கவனத்தில் எடுத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தினால் அத்தன்மை அதிகரிக்கும். இந்த முன்பள்ளிப் பருவகாலத்தில், அவர்கள் ஆராய்ச்சிமிக்க பல கேள்விகள் எழுப்புவார்கள். அவற்றிற்கான தகுந்த பதில்கள் அவர்கள் மூளைத் திறனையும், உளத்தையும் பெரிதும் மேம்படுத்தும் அவர்கள் கற்பனை நிறைந்தவர்களாக இருப்பார்கள். கற்பனை உலகம் ஒன்றை வடிவமைப்பார்கள். அவர்கள் Teddy bears, மேலும் blanket துண்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அது அவர்களுக்கு சௌகரியமாகவும், நித்திரைக்கு உதவியாகவும் அமைகின்றது. இவற்றை Transitiond Objects என்று கூறலாம். இப்பருவத்தில்தான் அவர்கள் பால் இனங்காணலை ஆரம்பிக்கின்றார்கள். ஆண், பெண் வேறுபாட்டை உடைகளிலிருந்தும், நடத்தைகளிலிருந்தும், உருவங்களிலிருந்தும் வேறுபடுத்திக் கற்றுக்கொள்கின்றார்கள். பாலுறுப்புக்களை வெளிக்காட்டலிலும், அதில் ஆராய்ச்சி கொள்வதிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். இந்த முன்பள்ளிப் பருவக் காலத்தில் அவர்களது சாதாரண படிமுறைகள் தடைப்படும் போது உணவு முறையிலான குழப்பங்கள் (Feeding Problems) பெற்றோரைப் பிரிவதில் ஏற்படும் ஏக்கம் (Seperation Anxiety), அடம்பிடித்தல் (Temper Tantrum), எதிரான நடத்தைகள் (Oppositional Behaviour), சிறிய கிளர்ச்சிகள் (Minor Degrees of aggression) என்பன காணப்படுகின்றன.

அடுத்து, பிள்ளைப் பருவத்தில் அவர்கள் தங்களை ஆணா, பெண்ணா என்பது பற்றிப் புரிந்து கொள்வார்கள். (Sexual Identity), எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்வார்கள். இதற்கான பாடசாலை *அனுமதி, கல்வி வாய்ப்புக்கள் கிடைக்காவிடில்* அக்குழந்தையின் எதிர்காலம் பூச்சியமாகி விடுகின்றது. அவர்கள் ஒவ்வொரு விடயத்திற்குமான வரையறைகளை அறிந்து கொள்கிறார்கள். இதற்கு, பெற்றோர்களோ அல்லது கவனிப்பாளர்களோ, ஆசிரியர்களோ உதவியாக அமைய வேண்டும். வரையறைகளை அமைக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில், அவர்கள் நடத்தைகள் சீர்குலையக் காரணமாகின்றது. பொதுவாக 5 தொடக்கம் 10 வயது வரையிலான காலகட்டத்தில் உளநலம் பாதிக்கப்படும் பட்சத்தில் பயங்கள், பயங்கரக் கனவுகள், சிநேகிதர்களுடனான உறவு முறையில் பிரச்சினைகள் அடக்கமற்ற முறைகள், சண்டை பிடித்தல் என்பன ஏற்படுகின்றன.


அடுத்து, கட்டிளம் பருவமான (Adolescence) கட்டத்தில், ஒரு பிள்ளை, பிள்ளைப் பருவத்திலிருந்து (Maturity) வயது முதிர்ச்சியடைகின்றது. இது பெண்களில் 11 தொடங்கி 13 வயதுக் காலப்பகுதியிலும், ஆண்களில் 13 தொடங்கி 17 வயது வரையும் காணப்படுகின்றது. தாங்கள் யார் என்பதும் தனித்துவமான குணாதிசயங்களையும் கொண்டிருப்பார்கள். தனது எதிர்காலம் பற்றிய வினாக்களை எழுப்பிக் கொள்வார்கள். இதற்கான சரியான பதில்கள் வீட்டிலுள்ளவர்கள் மூலமோ, பாடசாலையிலோ அளிக்க வேண்டும். சிநேகிதர்களுக்கு முக்கியத்துவம் ஏற்படும். மிக நெருங்கிய சிநேகிதரை (Best Friend) ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். மேலும் பாலியல் உணர்வு கூடியவர்களாகவும் எதிர்பாலுடன் (Opossite Sex) தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முயற்சிப்பார்கள். இவற்றிற்கான பால் பற்றி அறிவு கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவர்களைத் தகுந்த வழிகாட்டலில் இட்டுச் செல்லத் தவறினால், நாங்கள் பல விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதனால், அவர்கள் பல பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். சிநேகிதர்களுடனான பிரச்சினை, களவாடுதல், போதைவஸ்து உபயோகம், திருடுதல் என்பன உருவாக ஏதுவாக இருக்கின்றது.

இதன் மூலம், நாம் எப்படி ஒரு சிறுவனின் உள நலத்தைப் பேணி நற் சிறுவர்களை உருவாக்குகிறோமோ, அதே வேகத்தில் நல்ல சமுதாயம் ஒன்று ஏற்படுகின்றது. ✹

---



அடிப்பதற்கல்ல
அரவணைப்பதற்கே -
உங்கள் கரங்கள்.



# நித்தில முத்தாவோம்

திரு.தங்கராசா - இன்பராசா
கதிரவன் கலைக்கழகம்,
புதுக்குடியிருப்பு.

எம்மை பத்திரமாகவே.....
பாதுகாத்தால் - நாம்
நித்தில முத்தாவோம் - துயர்
சித்திர வதைக்குள்.....
சிக்கி விட்டால் என்றும்
பித்தனாய் நாமாவோம்

எத்தனை காலமாய்.....
எம்மவர் உரிமைக்காய்
விட்டனர் கோஷங்கள் - அவை
அத்தனைக்கும் எதிர்
வேட்டுக்கள் தீர்த்தனர்
எம்மிடை சில நீசர்கள்

பதினெட்டு வயது.....
வரைக்கும் கட்டாய
கல்வியை தொட்டிடுவோம்
இடைவிட்டு விலகும்
இயல்பினால் வாழ்வினில்.....
கட்டாயம் இடறுவோம்


கம்பிகள் இல்லா வீட்டு.....
சிறைக்குள்ளே.....!
வெம்பியே வாழ்வதுவோ?
வெட்ட வெயிலிலும்.....
கொட்டும் மழையிலும் - நாம்
கைகட்டி நிற்பதுவோ?

ஐ.நா சமவாயம்
சட்டங்கள் இருக்குது.....
புத்தக வடிவினிலே.....
ஐயா! சொல்லுங்கள்- இங்கு
பட்டங்கள் பறக்குது
எத்தனை வடிவினிலே.....

மணல் வீடு கட்டி - என்
தரை முற்றத்தில்
விளையாட முடியல்ல.....
நிழல் மரம் தேடி - என்
தெரு ஓரத்தில்
இளைப்பாற முடியல்ல

இறை அருள் தேடியும் - என்
விழி அகத்தில்.....
வழிபாடு தெரியல்ல - ஒவ்வொரு
கட்டங்கள் பேசுவேன்
கதறுது என் மனம் - எல்லாம்
நீர்மேல் எழுத்தாமே.....!

சட்டங்கள் இருந்துதான்
சாதிப்பது என்னதான்?
சாக்கடை உலகிலே.....!
எம்மை பத்திரமாகவே.....
பாதுகாத்தால் - நாம்
நித்தில முத்தாவோம்,



# மாணவர் இடைவிலகல்

திரு.தா.நித்தியானந்தன்
B 'Com' Dip.in.Edu.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
மண்முனைப்பற்று,
ஆரையம்பதி.

இன்றைய உலகில் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கற்பிப்பதில் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப கற்கும் முறைகளிலும், கற்பித்தல் நடவடிக்கைகளிலும் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு புத்தகத்தைப் படிக்க வேண்டுமென்றால் அதனை ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் படிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது அப்புத்தகம் CD வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. விரும்பியபடி அந்தப் புத்தகத்தைக் கேட்டுக்கொள்ளமுடியும். எங்களுக்குத் தேவையான விடயங்களைப் புத்தகத்திலிருந்து உடனே பிரதியெடுத்துக் கொள்ளமுடியும். கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வியை வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ள முடியும். பரீட்சை முறையும் இலகுவாக்கப்பட்டுள்ளது. (On Line Exam) எமது கணனி மூலம் பரீட்சையைச் செய்து உடனடியாக பெறுபேற்றைப் பெறமுடியும். இப்படியான வளர்ச்சிப் படிகளை எட்டியுள்ள நிலையிலும் பாடசாலைக் கல்வியை முழுமையாகக் கற்காமல் வெளியேறும் மாணவர்கள் எமது சமூகத்தில் காணப்படுகின்றார்கள்.

இப்படியான மாணவர்கள் இடைவிலகுவதற்குப் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாக உள்ளன.

1. பெற்றோரின் வறுமை.
2. மாணவர்களின் மந்த புத்தி.
3. கல்வியில் சம வாய்ப்பின்மை.

## பெற்றோரின் வறுமை :

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலேயே மாணவர் இடைவிலகல் கூடுதலாகக் காணப்படுகின்றது. இப்படியான நாடுகளில் வாழும் மக்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களாகக் காணப்படுகின்றார்கள். அநேகமான மக்கள் அன்றாடம் கூலித்தொழில் செய்து தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். இவர்களின் வருமானம் குறைவாக இருப்பதனால் வாழ்க்கைத்தரமும் குறைந்த மட்டத்தில் உள்ளது. இதனால் இவர்கள் தமது சீவியத்தை நடத்துவதற்கே சிரமப்படுகிறார்கள். இதனால் இக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தமது பெற்றோருக்கு உதவி செய்வதற்காகவே பாடசாலைக் கல்வியை விட்டுவிடுகிறார்கள். மீன்பிடி, மேசன் தொழில், விறகு வெட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களில் சிலர் தமது உதவிக்காகப் பிள்ளைகளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார்கள். பிள்ளைகளால் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதையே விரும்புகிறார்கள். அநேகமானவர்கள் படித்து என்ன செய்வது, படித்தபின்பு தொழில் பெற்றுக்கொள்ள முடியாது. அதைவிட எமது பிள்ளைகள் எழுத, வாசிக்க அதாவது கையெழுத்துப் போடத் தெரிந்தால் போதும் என்ற மனநிலையிலேயே வாழ்கின்றனர். இதனால் பெரும்பாலும் இடைவிலகல் ஏற்படுகின்றது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் இன்று எமது நாட்டில் பெரிய பிரச்சினையாகவுள்ளது. எங்கு பார்த்தாலும் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். சந்தைகளிலும், கடைகளிலும் மேலும் கஷ்டமான தொழில்களிலும் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எமது பகுதியிலும் இப்படியான நிலைமைகளைக் காணக்கூடியதாகவுள்ளது. சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதன் மூலம் குறைந்த ஊழியத்துடன் கூடுதலான வேலையைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் சிறுபெண்பிள்ளைகள் வீட்டு வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இப்படியாக எல்லாவற்றிற்கும் பெற்றோர் உடந்தையாக உள்ளதை அறியமுடிகிறது. எனவே, பெற்றோரின் வறுமை நிலையைப் போக்குவதற்காக சமூர்த்தி போன்ற

உதவி வழங்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலாக கிராமிய மட்டத்தில் சுயதொழில் ஊக்குவிப்பு மானியங்கள், கடன் உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. இருந்தாலும் பெற்றோர்கள் இன்னும் விழிப்படையவில்லை என்றே கூறவேண்டும்.

சிறுவர்கள் கல்வியில் நாட்டம் காட்டாமல் இருப்பதற்கு குடும்பப் பிண்ணனிதான் முக்கியமான காரணமாக அமைகின்றது. எமது பிரதேசத்தை நோக்கினால் நகர்ப்புறங்களில்வாழும் பெற்றோர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாக உள்ளது. படித்தவர்களோ, படிக்காதவர்களோ என்ற பேதமின்றி தங்களுடைய பிள்ளைகளின் நலனில், கல்வியில் அக்கறை செலுத்துகின்றனர். அவர்களுக்காக நேரத்தை ஒதுக்கிச் செயற்படுகின்றார்கள். நகரப்புறப் பாடசாலைகளில் தரம் – 05 பரீட்சைக்காகத் தயார்படுத்தப்படும் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்கிறார்கள். தந்தை, அல்லது தாய் இவர்களை அழைத்துச் செல்கிறார்கள். இவற்றிற்கு மேலாக பெரிய கருத்தரங்குகளும் நடாத்தப்படுகின்றது. இதனால் இவர்கள் சித்திபெறும் வாய்ப்புக் கூடுதலாக உள்ளது. ஆனால் கிராமப்புறங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் வைத்தால் அவர்களுக்கு மதிய உணவைக் கொண்டுவந்து கொடுப்பதற்கே பெற்றோர் அக்கறை காட்டுவதில்லை. இதனால் தொடர்ந்தும் பின்தங்கிய பிரதேசங்களின் கல்வி நடவடிக்கைகள் மந்தகதியில் செல்வதைக் காணமுடிகின்றது. எனவே, இப் பகுதிகளிலுள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன் மூலம் இடைவிலகல்களைக் குறைக்க முடியும்.

**மாணவர்களின் மந்த புத்தி :**

பாடசாலைகளில் ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் கல்வி பயின்றால் இவர்களில் எல்லோரும் ஒரே அளவு கெட்டித்தனம் உள்ளவர்களாக இருப்பதில்லை. இவர்களை மீத்திறன் உள்ளவர்கள், சராசரி குறைந்த வர்கள் என்று பாகுபடுத்தமுடியும். இன்றைய கல்வித் திட்டத்தின்படி எந்த மாணவர்களையும் மேற்படி வகைப்படுத்த முடியாது. ஏனெனில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இவ்வருடம் (2008) நடந்து முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 590 மாணவர்கள் எந்தப் புள்ளியையும் பெற்றுக்கொள்ளவில்லையென்று பரீட்சை ஆணை யாளர்நாயகம் தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளார். எனவே, மாணவரிடையே மந்த புத்தியானது எப்படி ஏற்படுகின்றதென்பதைக் கண்டறிய முடியவில்லை.

வைத்தியர்களின் கருத்துப்படி ஊட்டச்சத்துக் குறைவினாலும் மந்தபுத்தி ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. இதேவேளை நல்ல போசாக்குள்ள குழந்தைகள் கூட மந்தபுத்தி உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். சில பிள்ளைகள் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் செய்முறை சம்பந்தமான பயிற்சிகளில் கூடிய அக்கறை காட்டுகிறார்கள். இதன்மூலம் புள்ளிகளைப் பெறமுடிகின்றது. தற்போதைய கல்வித்திட்டத்தில் நடத்தப்படும் பாடசாலை மட்டக் கணிப்பீடு இப்படியான மாணவர்களையும் உற்சாகப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்த முறையும் பரீட்சைப் பெறுபேற்றில் சேர்க்கப்பட்டால் மாணவர் நன்மையடைவர். இடைவிலகும் சந்தர்ப்பம் குறைக்கப்படும்.

**கல்வியில் சமவாய்ப்பு இன்மை :**

இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் நகரப்புறப் பாடசாலைகளில் கூடிய வளங்கள் உள்ளபோதும், பின்தங்கிய பாடசாலைகளில் குறைந்த வளங்களே காணப்படுகின்றது. சில பாடசாலைகளில் கட்டிட வசதி, தளபாட வசதி, மின்சார வசதிகள் போன்றவை இல்லாமல் உள்ளது. இதனால் இவ்வித பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் அக்கறை காட்டுவதில்லை. பாடசாலைச்சூழல் அவர்களைக் கவரவில்லை என்றே கூறமுடியும். இப்பாடசாலைகளில் அதிகமானவை தரம் – 5 வரையிலான வகுப்புக்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றது. இப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மாணவரின் கல்வி பெரிதும் பாதிப்படைகின்றது. இப்படியான சூழலில் மாணவர்கள் தரம் – 6 படிப்பதற்கு பலமைல் தூரம் செல்லவேண்டியிருப்பதால் இவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாதநிலை ஏற்படுகின்றது. எனவே, இப்படியான பாடசாலைகளையும் வளமுள்ளதாக மாற்றுவதற்கு கிராமமட்டத்தில் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இப்படியான நிலைமை தோன்றும்போது மாணவர் இடை விலகலைக் குறைக்க முடியும்.

இப்படியான பிரதேசங்களில் வாழும்சமூகம் மற்றவர்கள்மேல் அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்லவில்லையென்றால் அவர் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிய வேண்டும். கிராமமட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டாயக்கல்வி குழுக்கள் நன்கு செயற்பட வேண்டும். ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் பாடசாலை செல்லாத மாணவர்களின் விபரம்

திரட்டப்பட்டு அதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். சில பிள்ளைகள் சிறிய விடயங்களுக்குக்கூட பாடசாலைக்குச் செல்லமறுப்பர். உதாரணமாக புத்தகப்பை இல்லாமல் பாடசாலைக்குப் போகாதவர்களும் உள்ளனர். எனவே, சமூகம் பிள்ளைகள் தொடர்பில் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். பிரதேச செயலாளர் மட்டத்தில் இயங்கும் குழுக்கள் திறம்பட இயங்கினால் எதிர்காலத்தில் மாணவர் இடைவிலகலைக் குறைக்க முடியுமென்று கூறமுடியும்.

நாம் விலை பேசுவதற்கும்

விற்கப்படுவதற்கும்



கடைசரக்குமல்ல,


போகப் பொருளுமல்ல,

போதைப்பொருளுமல்ல.

எம்மைப் பற்றித்


தீர்மானிப்பதில்

எமக்கும் பங்குண்டு.



# சிறுவர் இலக்கியம்

**R.சுலோசனா**
**தேசிய கல்வியியற் கல்லூரி,**
**தாழங்குடா.**



சிறுவர்களின் மொழியறிவு, ஆக்கத்திறன், கற்பனையாற்றல் என்பவற்றினை விருத்தி செய்யக்கூடியவகையில் அமைந்த இலக்கியங்கள் சிறுவர் இலக்கியங்களாகும். சிறுவர் இலக்கியத்திற்கு இன்றியமையாத ஊடகமாக மொழி காணப்படுகின்றது.

சிறுவர் இலக்கியங்கள் முதன்மைநிலை ஒன்று, முதன்மை நிலை இரண்டு, முதன்மைநிலை மூன்று என ஒவ்வொரு நிலைக்கும் பொருத்தமான முறையில் அமைந்து காணப்படுகின்றது. முதன்மை நிலை ஒன்றில், தரம் 1-2 வரையிலான வகுப்புக்கள் காணப்படுகின்றன. முதன்மைநிலை இரண்டில் தரம் 3-4 வரையிலான வகுப்புக்கள் காணப்படுகின்றன. முதன்மைநிலை மூன்றில் தரம் ஐந்து காணப்படுகின்றது. எனவே, முதன்மைநிலை ஒன்றில் உள்ள சிறுவர்களுக்கு வாய்மொழி அறிவினையே அதாவது செவிமடுத்தல், பேசுதல் ஆகிய மொழியறிவினை விருத்தி செய்யக்கூடியன. முதன்மை நிலை இரண்டு, முதன்மை நிலை மூன்று ஆகிய நிலையில் உள்ளவர்களுக்கு எழுத்தறிவினை விருத்தி செய்யக்கூடிய வகையில் அமைந்த செயற்பாடுகளே வெற்றி அளிக்கும்.

எனவே, சிறுவர் இலக்கியங்களின் முக்கிய பண்பாகக் காணப்படுவது இரசனை, ஆக்கத்திறன் என்பவற்றினை விருத்தி செய்வதாகும். சிறுவர் இலக்கியத்தின் நன்மைகளும் இவையேதான் எனக் குறிப்பிடலாம். சிறுவர் இலக்கியம் பொருளுள்ளதாக இருக்க வேண்டும். சிறுவர் இலக்கியங்கள் வடிவம், உள்ளடக்கம், மொழிநடை, எழுத்தளவு, தெளிவு

படங்களின் பொருத்தப்பாடு என்பவற்றினை மிகவும் சிறந்த முறையில் கொண்டிருப்பதுடன் நூலின் தொழில்நுட்ப அம்சங்களாக எழுத்தளவு, தெளிவு, நூலின் அளவு, படங்களின் மூலம் சித்திரித்தல் போன்றவற்றினைக் கொண்டிருக்க வேண்டும்.

சிறுவர் இலக்கியங்கள் கொண்டிருக்க வேண்டிய மொழியின் பாங்காக பின்வருவனவற்றைக் கொள்ளமுடியும். இலகுவான வாக்கியங்களாக இருத்தல், எளிதான சொற்களஞ்சியமாகவும், பரிட்சயமான சொற்களையும் கொண்டிருத்தல், கலப்பு வாக்கியங்கள் இருக்கக்கூடாது. தனிவாக்கியங்கள் இடம்பெறுதல், எந்தச் சந்தர்ப்பங்களிலும்கூட கடினபதங்களை ஊகித்தறியக்கூடிய தன்மை, செய்வினை வாக்கியங்கள் இடம்பெறுதல், மாற்றுப் பெயர்கள் இடம்பெறக்கூடாது. உதாரணம் : அவன், அவள், அது போன்றன.

சிறுவர் இலக்கியங்களைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய நூலின் உள்ளடக்க அம்சங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுவர்களின் உளவியல் தேவைகளை நிறைவு செய்யக் கூடியனவாக இருக்க வேண்டும். வாசிப்பினைத் தூண்டக்கூடிய தன்மை, மாணவர்களது கற்பனையைத் தூண்டக்கூடிய தன்மை, மாணவர்களது ஆக்கத்திறமை மேம்படுத்தல், வாசகர் தேவை, படிப்பினையை மேம்படுத்துதல், மாணவர்களது மனவெழுச்சியினை மேம்படுத்தக்கூடியதன்மை.

சிறுவர் இலக்கியங்களைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். விலங்குகள், பறவைகள் பற்றிய கதைகள், தேவதைகள் பற்றிய கதைகள், நாட்டார் கதைகள், வீட்டைப் பின்னணியாகக் கொண்ட கதைகள், சுற்றாடல் சார்ந்த கதைகள், வீரதீரச் செயல்கள் பற்றிய கதைகள், நாடக நகைச்சுவைக் கதைகள், அன்றாட வாழ்க்கைச் சம்பவங்கள் பற்றிய கதைகள், கேலிக்கைச் சித்திரக் கதைகள், நொடிகள் போன்றனவாகும்.

சிறுவர் இலக்கியங்களை இருவகையாகப் பிரிக்க முடியும். இலத்திரனியல் இலக்கியங்கள், அச்சூடகங்கள் என்பனவாகும். இலத்திரனியல் ஊடகங்களாக வானொலி, தொலைக்காட்சி, சிறுவர் ஒளிப்பதிவு நாடாக்கள், சகலவிதமான சீடித்தட்டுக்கள் (இறு வெட்டுக்கள்) போன்றவாகும். அச்சூடகங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். புனைக் கதைகள், கவிதைகள், உரையாடல்கள், புதிர்கள், விடுகதைகள், நாவல்கள், சிறுவர் சஞ்சிகைகள், வேடிக்கை வினோதங்கள் போன்றனவாகும்.

அடுத்து, சிறுவர் இலக்கியங்களில் இருக்க வேண்டிய முக்கிய பண்புகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளமுடியும். படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். படங்களுடன் எழுத்துக்கள் இருக்க வேண்டும். மனிதர்கள், தேவர்கள் என்போர் பாத்திரங்களாக அமைந்த கதைகள், தேவதைகள், பூதங்கள் போன்ற அசாதாரணமான பாத்திரங்கள் கொண்டமைந்த கதைகள், அஃறிணைப் பொருட்கள் பேசுவது போன்ற கதைகள், அதிகளவான படங்களும் குறைந்த வாசகங்களும் கொண்ட கதைகள், படங்கள் மூலம் பல விடயங்களை விளக்கக்கூடியதன்மை, நல்ல கருத்துக்களை மனதில் பதிக்கக் கூடியதன்மை கொண்டிருத்தல், திருத்தமான மொழியமைப்பும், எளிமையும் கொண்டிருத்தல், எண்ணக்கரு விளக்கம் இருக்காது என்பதால் அகக்காட்சி மூலம் விளங்கக்கூடியதன்மை இருக்க வேண்டும்.

அடுத்து, சிறுவர் இலக்கியங்களைக் கற்பிக்கும் நுட்பங்களைப் பற்றி நோக்குவோமாயின், படங்களை ஆதாரமாகக் கொண்ட உரையாடல்கள்மூலம் கற்பிக்க வேண்டும். பின்னர் கதையினை வளர்த்துச் செல்லக்கூடியவகையில் அமைதல் வேண்டும். பட அகராதிகளைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும். ஐந்து அல்லது பத்து நிமிடத்தினுள் கதையினை நிறைவு செய்யக்கூடிய வகையில் அமைதல் வேண்டும்.

அடுத்து, சிறுவர் இலக்கியங்களைக் கற்பிக்கும் போது மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களாகப் பேச்சுத்திறன், சிந்திக்கும் ஆற்றல், ஞாபகத்தில் நிற்கும்

திறன் அதிகரிக்கும். வினாக்களுக்கு விடைகூறும் திறன், எதிர்காலத்தில் நிகழக்கூடியதை முற்கூட்டியே கூறும் திறன், அடிப்படை இலக்கணப் பண்பு, நிறுத்தற்குறியீடுகள் பற்றிய விளக்கம், வாக்கியங்கள் தொடர்பான அறிவு, கதையில் கூறப்பட்ட சொற்கள் சொற்றொடர்களைத் தாமும் திருப்பிக்கூறுதல் போன்றனவாகும்.


அடுத்து, கதைகளைச் செவிமடுத்துக் கொள்வதால் மாணவர்களிடையே வளரவேண்டிய, வளர்த்துக் கொள்ளும் பண்புகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளமுடியும். பொறுமை, குழுஉணர்வு, பிறரைமதித்தல், சுயநம்பிக்கை, செவிமடுத்தல், பண்பாகவும், உன்னிப்பாகவும் செவிமடுத்தல் போன்றனவாகும்.

அடுத்து, சிறுவர் இலக்கியங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய திறன்களாகப் பின்வருவனவற்றினைக் கொள்ளமுடியும். கவர்ச்சிகரமான தொனியுள்ளவர், படிப்படியாகக் கதையினை வளர்த்துக்கொள்ளக்கூடியவராக இருத்தல். பாவனை, அபிநயம் செய்யக்கூடியவராக இருத்தல். குரலை மாற்றிப் பேசக் கூடியவராக இருத்தல், மாணவர்களுக்கு ஆர்வத்தினை உண்டு பண்ணக் கூடியவராக இருத்தல், வினாக்களைத் தொகுத்தும், எதிர்காலத்தில் நிகழக்கூடியதைக் கேட்கும் அவர்களது கவனத்தினைத் திருப்பக் கூடியவராக இருக்க வேண்டும்.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்துக் கூறுகின்றபோது சிறுவர் இலக்கியங்கள்மூலம் மாணவர்கள், பல்வேறு மொழித்திறன்களை விருத்தி செய்யக்கூடியவகையில் அமைந்துள்ளது. ஆனால் இன்று 'மொண்டிசோரி' எனப்படும் முன் பாடசாலைகளிலும் ஆரம்பப் பாடசாலைகளிலும், நெட்டுச் செய்யக்கூடிய வகையிலும், பொறிமுறையான முறையிலுமே சிறுவர் இலக்கியங்களைக் கற்கின்றனர். கோட்பாட்டறிவுடன் செயற்பாட்டறிவினை விருத்தி செய்யக்கூடிய வகையில் அமைந்த சிறுவர் இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிக்கும் போதுதான் மாணவர்களது ஆக்கத்திறன், கற்பனையாற்றல் என்பன விருத்தியடையும்.

மென்மையான பூக்களுக்குமேலே
நஞ்சுப்பூச்சிகளா?





# சிறுவர் இல்லங்களும், அவற்றின் தரங்களை மேம்படுத்தலும்

தொகுப்பு :
திருமதி.சந்திரகாந்தன் விஜயரூபி
நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்,
(சிறுவர் நன்னடத்தை)

சிறுவர் இல்லங்கள் என்பவை நிர்க்கதிக்குள்ளான அநாதைச் சிறுவர்களுக்கு தற்காலிக புகலிடமளிப்பவையாகும். தாய், தந்தை இருவரையும் இழந்த சிறுவர்கள், தாய், தந்தை இருவரில் ஒருவரை இழந்த சிறுவர்கள், பாதுகாப்பு தேவைமிக்க சிறுவர்கள் என்போரே இச்சிறுவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல சிரமங்களுக்கு மத்தியிலும் இவ்இல்லங்கள் தொண்டு நிறுவனங்களது உதவியுடன் ஆற்றும் சேவைகள் பெரிதும் பாராட்டுக்குரியவை.

சிறுவர் நன்னடத்தை திணைக்களமானது பிள்ளைகள் குடும்பச் சூழலுடன் வாழ்வதனையே பெரிதும் விரும்புகிறது. ஆயினும் சாதகமற்ற குடும்பச்சூழல், நிர்க்கதிநிலை, பாதுகாப்பு நெருக்கடி என்பவற்றில் வாழும் சிறுவர்களை தற்காலிகமாக சிறுவர் இல்லங்களில் அனுமதிப்பதை சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் தடைசெய்யவில்லை. ஆயினும் இவ்வாறான சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழும்போது, அவர்களது குடும்ப சூழலையொத்த நிலையையும், நல்ல இருப்பிடநிலையையும் இவ்வில்லங்கள் வழங்க வேண்டும் என சிறுவர் நன்னடத்தை திணைக்களம் எதிர்பார்க்கின்றது. இதற்காக இல்லங்களின் தரத்தினை மேம்படுத்த சில நியமவிதிகளை உருவாக்கியுள்ளது.

1. கட்டடங்கள் மற்றும் சூழல் என்பன தொடர்பான நியமவிதிகள்

அ) ஒவ்வொரு பிள்ளைக்கும் உறங்கும் அறைகளில் 36 சதுர அடி இடவசதி ஒதுக்கீடு செய்தல்.

ஆ) ஒளி மற்றும் காற்றோட்டம் என்பவற்றுக்கு வசதியாக கதவுகளும், யன்னல்களும் கட்டடத்தின் பரப்பளவின் 1/7 பகுதியாக அமைந்திருத்தல்.

இ) பத்து சிறுவர்களுக்கு ஒரு மலசல கூடம்.

ஈ) கிணற்றுநீரை பாவிப்பதாயின், கிணற்றினைப் பாதுகாப்பாக பேணுதல்.

உ) சுகாதாரம் பேணுதலும், பாதுகாப்புமிக்க கட்டட சூழல் முறைகளும்.

2. உணவு தொடர்பான நியமவிதிகள்

அ) நிறையுணவாகவும், போசாக்குடையதாகவும் குறிப்பிட்ட அளவுகளிலும் இருத்தல்.

ஆ) உரியவயதுப் பிரிவினருக்கு ஏற்புடையதாக உணவுப் பட்டியலை தயாரித்தல்.

இ) நாளாந்தம் வழங்கப்படும் உணவு வகைகளையும், அளவையும் காட்டும் இடாப்பு பேணுதல்.

ஈ) வாரமொன்றுக்கு தேவைப்படும் அரிசி, தேங்காய், சீனி, மா மற்றும் கறிச்சாமான்கள் என்பவற்றுடன் 03 நாட்களுக்கு தேவைப்படும் மரக்கறி வகைகளை சேமித்து வைத்தல்.

3. சிறுவர் அணியும் ஆடைகள் தொடர்பான நியமவிதிகள்.

அ) ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் போர்த்துக்கொள்ள துணி, துவாய் இருத்தல்.

ஆ) வீட்டு பாவனைக்கு குறைந்த பட்சம் 02 ஆடைகளையும், பாடசாலை பாவனைக்கு 03 ஆடைகளையும், சிறந்த சந்தர்ப்பத்திற்கு தரமான ஒரு ஆடையும் இருத்தல் வேண்டும்.

4) தளபாடங்கள்

அ) 06 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் தனியான அலுமாரி.

ஆ) 06 வயதுக்கு கீழ்ப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் பொதுவான அலுமாரி.

இ) உணவருந்தவும், வாசிப்பதற்கும் போதியளவு மேசைகளும், கதிரைகளும்.

5) கல்விச் சாதனங்கள்

அ) தேவையான பாடசாலை புத்தகங்களும் ஏனைய சாதனங்களும்.

ஆ) நூல் நிலைய வசதி.

இ) குறைந்தது 01 நாளேடும், 01 வாரப்பத்திரிகையும்.

6) பொழுது போக்கு சாதனங்கள்

அ) வானொலிப் பெட்டியொன்று.

ஆ) சங்கீத உபகரணங்கள்.

7) பொதுவான விடயங்கள்

அ) பிள்ளைகள் தத்தமது சமயத்தை பின்பற்றுவதற்கான பொருத்தமான சூழல் உருவாக்குதல்.

ஆ) சில மாதங்களுக்கு ஒருமுறை சுற்றுலா ஏற்பாடு.

இ) பிள்ளைகள் தமது பெற்றோர் பாதுகாவலருடன் தொடர்பை பேணுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

இவ்வாறாக பல்வேறு வரையறைகளின்கீழ் பல நியமவிதிகளை உருவாக்கியுள்ள போதிலும் அவற்றினை முழுமையாக கடைப்பிடிக்கும் இல்லங்கள் குறைவாகவே உள்ளன. எனவே இவ்வாறான நியம விதிகளையும், இவற்றுக்கு மேலதிகமாக சிறுவர் நலனை கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களின்மூலம் சிறுவர் இல்லங்கள் தங்களது சேவையினை மிகவும் சிறப்பாக ஆற்றமுடியும் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணை : சிறுவர் நன்னடத்தை திணைக்களம் சுற்று நிருபம்



# சிட்டுற்கு ஏன் சிறை

இன்றைய சிறுவர் நாளைய தலைவர் என்று
இனிய வார்த்தை மட்டும் பேசுகின்றீர்

சின்னஞ்சிறு சிட்டுக்களை பல கதை கூறி
சிறுவர் இல்லக் கூண்டில் அடைத்தீர்

பெற்றெடுத்ததும் கடமை முடிந்ததாக எண்ணி
பெற்ற பிள்ளையை மற்றொரு இடத்தில் விட்டுவிட்டீர்

அம்மாவின் அன்பும் அப்பாவின் அரவணைப்பும்
அக்கா அண்ணாவின் பாசமும் கிடைக்காது செய்தீர்

பாட்டி கூறும் கதையோ தாத்தா கொடுக்கும் மிட்டாயோ
பாலகர்க்கு கிடைக்கும் வழியை அடைத்தீர்

உற்றார் உறவினர் அண்டை அயல் என்று
உள்ள சொந்தம் எல்லாம் இல்லாதாக்கினீர்

வீட்டு முற்றத்தில் நிலவொளியில் உறவுகளோடு
விளையாடி மகிழ்ந்திடும் இனியபொழுதுகளை இழக்கச்செய்தீர்

திருநாளில் ஒன்றுகூடி களித்திடும் இன்பத்தை
ஒருநாளும் கிடைக்காது ஒழித்திட்டீர்

பிணியுற்று இயலாது இருக்கையில் பாசத்துடன்
பணிவிடை செய்ய யாருமில்லையென்றாக்கினீர்


நெஞ்சம் வலிகண்டு கலங்கிடும் வேளையில்
கொஞ்சம் கூட ஆறுதல் சொல்ல யாருமில்லாதாக்கினீர்

குடும்பத்துடன் குலாவி மகிழ்ந்திட
குவலயத்தில் சிறுவர்க்கும் உரிமையுண்டு என்பதை ஏன் மறந்தீர்

சின்னஞ்சிறு சிட்டுக்களை சிறைமீட்டு
சிறகடித்து சுதந்தரவானில் பறக்கவிட வாரீர்

திருமதி கல்யாணி ரெட்ணஜோதி
சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், மண்முனைப்பற்று.

# பிள்ளைகளைப் பராமரிக்கும் முறைகள்



தொகுப்பு :

செ.சக்திநாயகம்
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம். மண்முனைப்பற்று.

**பொ**துவாக எமது சமூகத்தில் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகள் ஒழுக்கமாகவும், கீழ்ப்பணிவுடனும் வளரவேண்டும் என்கின்ற நல்நோக்கத்துடன் கட்டுப்பாடாகப் பராமரிக்கின்றனர். அதேவேளை சில பெற்றோர்கள் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பிள்ளைகளினது விருப்பத்திற்கமைவாக சுதந்திரமாக பராமரிக்கின்றனர். எனினும் சமூகத்தில் பிள்ளைகள் பராமரிக்கப்படும் முறைகளைப் பின்வரும் 03 அடிப்படையில் பார்க்கலாம். அவையாவன,

1. அதிகாரபூர்வமானது (Authority)
2. கட்டுப்பாடற்ற சுதந்திரமுறை (Permissive)
3. கட்டுப்பாடான சுதந்திரம் (Authority & Permissive)

**1) அதிகாரபூர்வமானது (Authority)**

- நேர அட்டவணை (Time Table) தயாரித்து பிள்ளைகளை வளர்த்தல். அதாவது பிள்ளையினது அனைத்து செயற்பாடுகள், நடவடிக்கைகளில் நேர அட்டவணையின்படி நடக்க வைத்தல்.
- அதிகளவுத் தண்டனை (Punishment) பிள்ளை சிறு பிழை விட்டாலும் தண்டனை. பிள்ளை தொடர்பான நடவடிக்கைகளில் எடுத்தவைக்கெல்லாம் மாற்றுத் தீர்வின்றி அதிகளவுத் தண்டனை.
- பிள்ளைகளது பிரச்சினைகளை இரகசியமாக வைத்திருக்காது மற்றவர்களிடம் கூறுதல்.

மேற்காட்டியவாறு வளர்ந்த பிள்ளைகள்,

- ☆ எதிலும் தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் இருக்கும்.
- ☆ தலைமைத்துவப் பண்பு குறைவாக இருக்கும்.
- ☆ தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.
- ☆ ஆத்மசக்தி/ திருப்தி குறைவாக இருக்கும்.
- ☆ நண்பர்கள் குறைவு.
- ☆ நம்பிக்கை குறைவாக இருக்கும்.
- ☆ தமக்கு ஏற்படும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கமுடியாது பின்வாங்குவர்.
- ☆ குறைவான மகிழ்ச்சியுடன் இருப்பர்.
- ☆ பொதுவாக உளரீதியாக பாதிக்கப்பட்டிருப்பர்.

2) கட்டுப்பாடற்ற சுதந்திர முறை (Permissive)

- ☞ பிள்ளை கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்தல்.
- ☞ பிள்ளையை கண்காணித்து உதவி செய்வதில்லை.
- ☞ பிள்ளை பிழையாக நடந்தாலும் தண்டனை என்பதேயில்லை.
- ☞ பிள்ளை எது செய்தாலும் சரி என்ற நிலை.
- ☞ பிள்ளைக்கு சரி, பிழை தெரியாதிருத்தல்.
- ☞ பிள்ளை பெற்றோர் போன்று நடக்க முற்படல்.

மேற்காட்டியவாறு வளர்ந்த பிள்ளை,

- ☞ தன்னம்பிக்கை (Self Confidence) இல்லாதவராக இருப்பார் அதாவது அவர் தன்னையும் நம்பமாட்டார், மற்றவரையும் நம்பமாட்டார்.
- ☞ தலைமைத்துவப் பண்பு (Leadership) காணப்படாது.
- ☞ நண்பர்கள் அதிகமாக இருக்கும் அதேவேளை கட்டுப்பாடு கிடையாது.
- ☞ திருப்தி (Satisfaction) குறைவாக இருக்கும்.
- ☞ குடும்பப் பிணைப்பைவிட நண்பர்களின் பிணைப்பே அதிகம்.
- ☞ நீதிக்குக் கட்டுப்படமாட்டார்கள்.

03. கட்டுப்பாடான சுதந்திரம் (Authority - Permissive)

☞ பெற்றோருக்கும், பிள்ளைக்குமான உறவு மிக முக்கியமான தாகும். அதாவது போதுமான அளவு நேரம் பிள்ளையுடன் செலவளித்தல் வேண்டும்.

☞ பிள்ளையுடன் 01 அல்லது 1½ மணிநேரம் தூங்குதல் வேண்டும்.

☞ பிள்ளைகளுடன் அன்பாக, சந்தோஷமாக கலந்துரையாடல் வேண்டும்.

☞ கற்றல் விடயங்களில் கவனமாக இருத்தல் வேண்டும். உதாரணமாக பிள்ளைகளது பாடசாலை புத்தகப் பையினையாவது கொட்டிப்பார்த்தல் வேண்டும்.

மேற்காட்டியவாறு வளர்ந்த பிள்ளை,

☆ தன்னம்பிக்கை உள்ளவர்களாகக் காணப்படுவர்.

☆ ஆளுமை விருத்தி, தலைமைத்துவ பண்பு விருத்தி உடையவர்களாக இருப்பர்.

☆ சரி, பிழை, நல்லது, கெட்டதை விளங்கிக்கொள்வர்.

☆ சிறந்த நண்பர்கள் இருப்பார்கள், பெற்றோர் நண்பர்களாக இருப்பார்கள்.

உளவியல் அறிஞரான William Watson என்பவருடைய ஆய்வில் கட்டுப்பாடு, சுதந்திரம் என்பவைகளைப்பற்றி குறிப்பிடுகிறார். அதாவது விளையாட்டின் மூலம் குழந்தைகள் கட்டுப்பாடு, சட்டங்களை கற்றுக்கொள்கிறார்கள். கட்டுப்பாடு கூடும்போது உளதாக்கம் ஏற்படும், சுதந்திரம் கூடும்போது நெறிபிறழ்வு ஏற்படும்.

இவை இரண்டும் அளவாக இருந்தால் பிள்ளைகளது ஆளுமை விருத்தியடைந்து சமூக பொருத்தப்பாடான பிள்ளையாக வளர்ச்சியுறும்.

எனவே எமது சமூகத்தில் கட்டுப்பாட்டுடன்கூடிய சுதந்திரமான முறையில் பிள்ளைகளைப் பராமரிக்கும் போது ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். ✹

# ஆரோக்கியம்




T.தயாபரன்
கதிரவன் கலைக்கழகம்

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
பாடசாலையிலும் படிப்பு
மாலை முழுவதுமே படிப்பு
நடுச் சாமமாகும் வரை படிப்பு

பாலர்!
கதை சொல்லச் சொன்னால் கடுப்பு
பகலெல்லாம்
கணனி முன்னால் இருக்கச் சொல்லி கண்டிப்பு
புத்தகங்கள் சுமக்கும் பையோ தடிப்பு
முதுகோ கேள்விக் குறியாய் வடிவமைப்பு

விளையாடப் போறேன் என்றால் மறுப்பு
விட்டண்டை சிறுவருடன் சேர்தல் கண்டால் வெறுப்பு
இறைச்சிக்கோழி போன்றே என் வளர்ப்பு - இதில்
எங்கிருந்து வரும் எனக்கு நோய் எதிர்ப்பு?





# சிறுவர் தத்தெடுப்பு

தொகுப்பு :
திரு.பா.சந்திரகாந்தன்
நன்னடத்தை உத்தியோகத்தர்

தத்தெடுத்தல் அல்லது மகவேற்பு செய்தல் என்பது குழந்தை தொடர்பில் அப்பிள்ளை மீதான உரிமையை ஒருவரிடமிருந்து இன்னும் ஒரு நபருக்குச் சட்டரீதியாக மாற்றம்செய்யும் ஒரு நடவடிக்கையாகும். பிள்ளையின் "அதி உயர் சிறந்த நலனை" அடிப்படையாகக் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பிள்ளைக்குப் பாதுகாப்பளிக்கவும், பொருத்தமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்தவும், பிள்ளையின் நலனைக் கருத்திற் கொண்டே இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தத்தெடுத்தல் என்பது உள்நாட்டு மகவேற்பு, வெளிநாட்டு நபர்களால் மேற்கொள்ளப்படும் மகவேற்பு என இரண்டு வகைப்படுத்தப்படுகின்றது.

உள்நாட்டு மகவேற்பு எனும் போது ஒரு தனிப்பட்ட இலங்கைப் பிரஜையால் அல்லது திருமணமான கணவன், மனைவியினால் குழந்தை ஒன்றினை மகவேற்பு செய்வதனைக் குறிக்கின்றது. திருமணம் செய்த ஒருவர் மகவேற்பிற்கு விண்ணப்பம் செய்யும்போது வாழ்க்கைத் துணையின் சம்மதம் அவசியம் தேவைப்படுகின்றது. மகவேற்பிற்கு விண்ணப்பம் செய்பவர் 25 வயதிற்குக் குறையாதவராக இருப்பதுடன் மகவேற்கப்படும் குழந்தைக்கும், அவருக்கும் இடையில் வயது வித்தியாசம் 21 வயது இடைவெளி இருக்கவேண்டும். மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு தனிப்பட்ட ஆண் ஒரு பெண் குழந்தையை மகவேற்பு செய்ய முடியாது. எனினும் மாவட்ட நீதிமன்றமொன்று குழந்தையின் அதியுயர் பாதுகாவலன் என்ற வகையில் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்படுவது குழந்தையின் நலனைப் பாதுகாக்கும் எனக் கருதினால் ஆண் ஒருவர் பெண் குழந்தையை மகவேற்பு செய்ய அனுமதி அளிக்கலாம்.

குழந்தையொன்றினை மகவேற்புசெய்ய அக்குழந்தையின் பெற்றோர் சம்மதம் அவசியமாகும். அத்துடன் பிள்ளை 10 வயதிற்கு மேற்பட்டிருப்பின் பிள்ளையின் சம்மதம் பெறப்பட வேண்டும். பிள்ளை யொன்றினை மகவேற்பு செய்வதற்கு சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதன்படி,

**மகவேற்பு நடைமுறை :**

- ✳ விண்ணம் செய்பவர் தமது மகவேற்பிற்கான கோரிக்கையை சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கு சமர்ப்பித்தல்.
- ✳ ஆணையாளர் விண்ணப்பதாரியின் சமூக, பொருளாதார அறிக்கையை சம்மந்தப்பட்ட பிரதேச நன்னடத்தை உத்தியோகத்தரிடமிருந்து பெறுதல்.
- ✳ ஆணையாளர் நன்னடத்தை உத்தியோகத்தரது அறிக்கை தொடர்பில் திருப்தியடைந்தால் விண்ணப்பத்தினைப் பதிவுசெய்தல்.
- ✳ மகவேற்பு செய்யவிரும்பும் குழந்தையை அடையாளம் காண்பதற்கான அனுமதி விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். இதன்படி விண்ணப்பதாரிகள் குழந்தையைத் தெரிவுசெய்வர்.
- ✳ தெரிவுசெய்த குழந்தையை மகவேற்புசெய்ய யாரும் எதிர்ப்புத் தெரிவிக்காத விடத்தும், யாரும் விண்ணப்பிகாதவிடத்தும் ஒரு சட்டத்தரணி ஊடாக மாவட்ட நீதிமன்றத்திற்கு மகவேற்புக் கட்டளை யைப் பெறும்பொருட்டு விண்ணப்பம் செய்தல்.
- ✳ நீதிமன்றம் விண்ணப்பம் தொடர்பில் திருப்தியடையுமிடத்து மகவேற்புக் கட்டளையை அல்லது இடைக்காலக் கட்டளையை வழங்கும்.
- ✳ மகவேற்புக் கட்டளையைப் பிறப்பிக்கப்பட்ட பின்னர், கட்டளைப் பிரதி, பதிவாளர் நாயகத்திற்கு பிள்ளையின் புதிய பிறப்புச்சான்றிதழ் பெறும் பொருட்டு அனுப்பி வைக்கப்படும்.

மகவேற்பு முறையின் மூலம் பிள்ளையானது இயற்கை. பெற்றோர் மீது கொண்டிருந்த அனைத்து உரிமைகளையும் மகவேற்பு பெற்றோர் மீது கொண்டிருக்கும். இங்கு இம்முறை சட்டரீதியாக இடம்பெறுவதனால் பிள்ளையின் நலன் சிறப்பாகப் பேணப்படுவது உறுதியளிக்கப்படுவதுடன், பிள்ளையினைப் புறக்கணிப்பதோ, ஒதுக்கிவிடுவதோ ஏற்படமாட்டாது. சட்டத்தின் மூலம் பிள்ளை உரிமை மாற்றம் செய்யப்படுவதனால் குழந்தை தொடர்பில் எதுவிதப் பிரச்சினைகளும் எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது என்பதுடன் பிள்ளையும் நல்லதொரு வாழ்வை அனுபவிக்கும் என்பதும் உண்மையாகும்.

# எம் வாழ்வை உயர்த்திடுங்கள்



சிறுவராய் நாம் வாழ
சீர் சிறப்புத் தேவையில்லை
பெருமையோடு தந்திடுங்கள்
பெருஞ் செல்வம் கல்விதனை

நாடு போற்றும் பிரஜையாக
நாம் வாழ வழி சொல்லும்
நல்லவராய் நீங்கள் மாறி
நல் வழி காட்டிடுங்கள்

கனிஷ்ட பிரிவு கவிதை
1ம் இடம்
ரவி கௌசல்யா
மட்/நவரெத்தினராஜா வித்தியாலயம்

வெகுளியாய் எமை எண்ணி
வேலைக் கமர்த்த நினைக்காதீர்கள்
வேண்டாம் இனி இப் பிராயம் என
வேதனைக்குள் அமிழ்த்தாதீர்கள்.

ஒளியாக நீங்கள் மாறி
உரம் போட்டு எமை வளர்த்து
தரமான பயிர்களாக எம்முலகை
தரணியிலே வளர்த்திடுங்கள்



# பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்குவோம்

கட்டுரை - 1ம் இடம்
செல்வி.ச.திபஸ்னி
இளந்தளிர் சிறுவர் சமூக வட்டம்
தாழங்குடா - 02

இன்றைய காலகட்டத்திலே விஞ்ஞானமும், அறிவியலும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இப்போது இவ்வுலகம் விந்தை உலகமாக மாறிவிட்டது. அதேவேளை யுத்தமும் இவ்வுலகில் தொடர்கதையாக மாறிவிட்டது. இவ் யுத்தம் காரணமாக பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்". இதனைக் கருத்திற் கொண்டு பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்க வேண்டும். அவர்கள் சிறந்த முறையில் எதிர்காலத்தை வளமாக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளின் வாழ்க்கைக்காக அத்திவாரமிட்டு அவர்களை கரம் தூக்கிவிட வேண்டும்.

சிறுவர்கள் என்றால் யார்? சிறுவர்கள் என்பது 0 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட அனைவருமே சிறுவர்கள் தான். இச்சிறுவர்களை தங்கி வாழ்வோர்கள் என்று கூறுவர். இச்சிறு பருவத்தில்தான் இவர்களின் எதிர்காலத்தை நோக்கிய வேட்கையும் ஆரம்பிக்கின்றது. இவர்களின் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும்? அவர்கள் நல்லவர்களாகவோ அல்லது கெட்டவர்களாகவோ மாறுவதும் அவர் களின் எண்ணம், செயல் என்பன வேறுபடுவதும் இவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதனாலேயாகும்.

இப்பிள்ளைகள் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் குடும்பம், பாடசாலை, வாழும்சூழல் என்பன தீர்மானிக்கின்றன. இவர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காததால் இப்பிள்ளைகள் பேசாமடந்தைகளாக

ஒரு மூலைக்குள் முடங்கிவிடுகின்றனர். இதனால் இவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. இந்நிலை மாறவேண்டும். இவர்களின் வாழ்க்கை சிறக்க வேண்டும். இதற்காக ஒவ்வொருவரும் தன் பிள்ளைகள் மீது முழுக் கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.

"குடும்பம் ஒரு கதம்பம்" என்பர். இக்குடும்பத்தில்தான் பிள்ளையின் குழந்தைப்பருவம் ஆரம்பிக்கின்றது. குடும்பந்தான் சிறந்த சமுதாயத்தை உருவாக்குகின்றது. ஒரு சிறந்த நற்பிரஜையை உருவாக்குகின்றது. சிறந்த நாட்டை உருவாக்குகின்றது. இக்குடும்பத்திலுள்ள பெற்றோர்களே பிள்ளையின் எதிர்காலத்தை உருவாக்குகின்றனர்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே".இது கவிஞர் கண்ணதாசனின் கூற்று ஒரு குழந்தை பிறக்கும் போது கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை உள்ளத்துடனேயே பிறக்கின்றது. அக்குழந்தையை அன்னை எவ்வாறு வளர்க்கின்றாளோ அவ்வாறே அக்குழந்தையும் வளர்கின்றது. அக்குழந்தை வளர்ந்தவுடன் எண்ணம், செயல் என்பன மாறுபடுகின்றது. பிறக்கும்போது இருந்த வெள்ளை உள்ளம் கால ஓட்டத்தின் காரணமாக மாற்றமடைகின்றது.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்." என்பார்கள். சிறு பருவத்தில் அக்குழந்தை எவ்வாறு வளர் கின்றதோ அவ்வாறே எதிர்காலத்திலும் வாழும். எந்தப் பெற்றோர்கள் தன்பிள்ளையின் கருத்துக்குச் சுதந்திரம் கொடுக்கின்றார்களோ அதேபோன்று அப்பிள்ளையின் வாழ்க்கையும் சுதந்திரமாக அமையும். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை காரணமாக அக்குழந்தையின் வாழ்க்கை திசைமாறிச் செல்கின்றது. தன்குடும்பத்தில் நிலவும் கஷ்டத்தினால் அப்பிள்ளை வேலைக்கு அமர்த்தப்படுகின்றது. அப்பிள்ளையின் கருத்தை செவிசாய்ப்பதற்கு யாருமற்ற நிலையில் தவிக்கின்றது. அந்தஇடத்தில் அப்பிள்ளை சித்திரவதைக்கு ஆளாகின்றது. இவ்வாறு இப்பிள்ளைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது. சமூகத்தில்வாழும் சில துரோகிகளால் சில பெண்பிள்ளைகள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப் படுகின்றனர். இதனால் இப்பிள்ளைகளின் கருத்துச்சுதந்திரம்

மறுக்கப்பட்டு தனிமையில்சிக்கி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" இதற்கிணங்க இளமைப் பருவத்திலே கல்வி எனும் அமுதத்தை ஊட்டும் இடமாக பாடசாலை திகழ் கின்றது. எந்த ஆசிரியர் மாணவர்களை புரிந்துகொண்டு அவர்களின் கருத்தை செவிசாய்த்து அறிவை ஊட்டுகின்றார்களோ நிச்சயமாக அந்த அறிவு அப் பிள்ளையின் பிஞ்சு மனதில் "பசுமரத்தாணி போல்" பதிந்துவிடும். அது மட்டுமின்றி அங்கு நட்பு எனும் சிறந்த பண்பும் பேணப்படுகின்றது. இவ் நட்பினூடே இரு நண்பர்கள் தம் இருவரிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இதேபோன்று பாடசாலையில் பிள்ளைகளின் கருத்திற்கு செவிசாய்ப்பார்களாயின் இவர்களின் உலகை மகிழ்ச்சிகரமாக்கலாம்.

இன்று இந்நாட்டில் நிலவும் யுத்தம் காரணமாக பிள்ளைகள் தமது உறவை, உடமையை, உரிமையை இழந்து அகதி என்ற போர்வையில் வாழ்கின்றனர். இவர்களின் இந்நிலை மாற வேண்டும். அவர்களுக்கு உதவ பல நிறுவனங்கள் முன்வந்துள்ளபோதும் அவர்களின் கருத்தை செவிசாய்க்க யாரும் முன்வரவில்லை. இவர்களுக்கு இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதன்மூலம் இவர்களின் உலகை மகிழ்ச்சியானதாக்க வேண்டும்.

தாய், தந்தையை இழந்து அநாதைகளாக ஆச்சிரமங்களிலும், விடுதிகளிலும் வாழும் பிள்ளைகளின் நலன்கருதி அவர்களுக்கு கருத்துச் சுதந்திரத்தை அளிக்க வேண்டும். அப்பிள்ளைகளின் மனதில் இருக்கும் உணர்வுகளை யாராவது செவிசாய்ப்பார்களாயின் மனச்சுமையை குறைக்க முடியும். இதனூடே மகிழ்ச்சியான உலகினை பெற்றுக்கொடுக்க முடியும். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் முன்வர வேண்டும்.

இருளின் மத்தியில் நின்றுகொண்டு தனது எதிர்காலத்தைத் தேடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு ஒளியேற்ற வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் இவ் மண்ணைத் தொடும்போது எவ்வளவோ கனவுகள், எவ்வளவோ அபிலாஷைகள் கொண்ட மனதுடன்

பிறக்கின்றனர். இக்குழந்தை தனது கனவு, ஆசை, இலட்சியம் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டுமென்றால் அப்பிள்ளையின் கருத்தை செவிசாய்க்க ஒருவர் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் நிச்சயம் அப்பிள்ளை இவ்வுலகத்தில் மகிழ்ச்சிகரமாக வாழும்.

தோல்விதான் வெற்றியின் முதற்படி இதற்கிணங்க இப் பிள்ளைகள் தோல்வியைக்கண்டு துவள்கின்றபோது அப்பிள்ளைக்கு தோள் கொடுத்து தூக்கி விடவேண்டும். அன்று பாரதி பிள்ளைகளுக்காக பல பாடல்களைப் பாடியுள்ளார். இப் பாடல்களினால் பிஞ்சுப்பிள்ளைகளின் மனது கள்ளம் கபடமில்லாது நன்றாக வாழ வழிவகுக்கின்றது. இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள் என்ற கருத்தை மனதில் கொண்டு ஒவ்வொரு பிள்ளையும் வானில் சூரியன் போன்று பிரகாசிக்க தன்னால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். இப்பிள்ளைகள் வானில் பிரகாசிக்க ஒவ்வொரு பெற்றோரும் ஏணிப்படிகளாக மாறவேண்டும். சண்டை, சச்சரவுகள் அற்ற புதுயுக மொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும். சமாதானமும், நிம்மதியும் நிறைந்த வாழக்கையை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வுலகில் நடைபெறும் அநீதிகளை நிறுத்தி சிறுவர்களைப் பராமரிக்க வேண்டும். இப்பிள்ளைகளுக்கு ஏற்படும் மனக்குழப்பங்களை செவிசாய்ப்பதன் மூலம் தடுத்து சிறந்த தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்தல் போன்ற தீயசெயல்களை தடுக்க வேண்டும். வறுமையில் வாடும் பிள்ளைகளின் கஷ்டங்களை செவிசாய்த்துக் கேட்பதன்மூலம் இந்நிலையை மாற்றலாம்.

சிறுவர்களைப் பாதுகாக்கவும் அவர்களின் கருத்தை ஏற்று அவர்களுக்கு உதவும் நிறுவனங்களாக ஐக்கிய நாடுகள் சபை, சிறுவர் சமூக வட்டம், யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தைத் திணைக்களம் போன்ற இன்னும் பல நிறுவனங்கள் இப்பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக பெரிதும் உதவுகின்றன. இப்பிள்ளைகள் தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை இந்நிறுவனங்களே பெற்றுக்கொடுக்கின்றன.

இதேபோன்று ஒவ்வொரு பெற்றோரும் தம்பிள்ளைகளின் கருத்தை செவிசாய்க்க வேண்டும். அவர்களின் முடிவுகளை பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கலந்து ஆலோசித்து சரியான

முறையில் எடுத்தல் வேண்டும். ஒக்டோபர் 01ம் திகதி சிறுவர் தினமாகக் கருதினாலும் இப்பிள்ளைகளின் உரிமை, கருத்துச் சுதந்திரம் என்பன இன்னும் மறுக்கப்பட்டே செல்கின்றது. இந்நிலையைமாற்றி எதிர்வரும் ஒக்டோபர் 01ம் திகதி சிறுவர் தினத்தை கொண்டாடவிருக்கும் இப்பிள்ளைகளுக்கு சிறந்த உலகைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் தன் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி அவர்களின் மனதை புரிந்துகொண்டு சிறப்பான முறையில் அப்பிள்ளைகளின் கருத்துக்களை கேட்டறிந்து அப்பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன்மூலம் அவர்களின் உலகை மகிழ்ச்சியானதாக்குவோம்.

---



நாளைய உலகம் நாமே.

சிறுவர் இல்லம் என்னும் சிறையில் எம்மை அடைக்காதீர்கள்.



# குடும்பச் சூழலும் சிறுவர்களும்

மேற்பிரிவு - கட்டுரை 1ம் இடம்
செல்வி.சு.நிலோஜினி
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி
மகா வித்தியாலயம்.

சிறுவர் எனப்படுவோர் ஆறு வயது முதல் பதினெட்டு வயது வரையானவர்களே ஆவர். அவர்கள் எமது நாட்டின் தலைவர்களாக, எதிர்கால முன்னோடிகளாக, நாட்டின் பொருளாதாரப் பங்காளிகளாக, வரவேண்டியவர்கள். அவர்களைப் பேணிப் பராமரிக்க வேண்டியது எமது சமூகத்திலுள்ள அனைவரினதும் தலையாய கடமையாகும்.

அந்தவகையில் சிறுவர்களுடைய நலன்களிலும், நடத்தைகளிலும் முக்கிய பங்காளிகளாக இருக்க வேண்டியவர்கள் குடும்பச் சூழலில் வாழ்கின்றவர்களேயாவர். அடுத்து சமூகத்தில் ஒரு குழந்தை பிறந்தது முதல் வளரும்வரை அவர்கள் கூடியபங்கை தமது குடும்ப சூழலிலேயே கழிக்கின்றனர். எனவே குடும்ப சூழலில் காணப்படுகின்ற பழக்க வழக்கங்களும் நடத்தைகளுமே அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வாழ்வதற்கும், தீய செயல்களில் ஈடுபடவைக்கவும் வழிகோலுகிறது. அந்தவகையில் நல்ல குடும்ப சூழலில் வளர்கின்ற சிறுவர்கள் சிறந்த தலைவர்களாகவும், நல்ல பழக்க வழக்கமுள்ளவர்களாகவும், கல்வியில் ஆர்வம் காட்டக்கூடியவர்களாகவும், சிறந்த வினைத்திறனுள்ளவர்களாகவும், சமூகத்தில் பிறரால் மதிக்கத்தக்க உதாரன புருஷர்களாகவும் வளரவாய்ப்புக்கள் அதிகமுண்டு.

மோசமான குடும்ப சூழலில் வளர்கின்ற சிறுவர்கள் தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப தங்களை பழக்கப்படுத்திக் கொண்டு வாழ்வைச் சீரழித்துக் கொள்ளும் வகையில் தீய பழக்கங்களில் ஈடுபடுகின்றனர். இது அவர்களுடைய எதிர்கால வாழ்வை கேள்விக் குறியாக்குகின்ற ஒரு விடயமாகும். எனவே

சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு குடும்பசூழல் என்கின்ற விடயம் அவசியமான ஒன்றாகின்றது.

திருவள்ளுவர் இதனையே தனது பொய்யா மொழியாம் திருக்குறளிலே "நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்" என்று கூறிச்சென்றார். ஒரு நிலத்தில் வளர்கின்ற பயிரானது அந்நிலத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல் நல்ல குடியில் பிறந்தவர்களின் வாய்ச்சொல்லே அவர்களுடைய குலச் சிறப்பைக் காட்டும் என்கிறார். இதன்மூலம் நல்ல குடும்ப சூழலில் வளருகின்ற சிறுவரையும், மோசமான குடும்பசூழலில் வளருகின்ற சிறுவரையும் அவர்களுடைய வாய்ச்சொல்லில் இருந்தும் அவர்கள் நடந்துகொள்கின்ற நடத்தைகளிலிருந்தும் இலகுவாக நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

நல்ல குடும்ப சூழலில் வளருகின்ற சிறுவர்களின் நடத்தையாவது அவர்களின் பெற்றோரின் வளர்ப்பிலேயே தங்கியுள்ளது. "ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற குறள்மூலமும், "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்" என்ற குறளின் மூலமும் சிறுவர்கள் தங்கள் குடும்ப சூழலின் காரணமாக சிறப்புடையவராவதும் அதன் மூலம் தங்கள் பெற்றோர் சிறப்பும், மரியாதையும் உடையவராக வாழ வழிசெய்வதும் எடுத்துக் காட்டப்படுகிறது.

இதேவேளை மோசமான குடும்பச் சூழலில் வளர்கின்ற சிறுவர்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாத தன்மையினாலும், வறுமை காரணமாகவும், தெருவோரச் சிறுவர்களாகவும், வழிதவறிச் செல்கின்ற சிறார்களாகவும், உழைப்பாளிச் சிறுவர்களாகவும் மாற்றமடைகின்றனர். இதற்குக்காரணம் அவர்களுடைய குடும்பச்சூழலே.

"கொடிது கொடிது வறுமை கொடிது அதனிலும் கொடிது இளமையில் வறுமை" இது ஔவையின் வாக்கு அந்த வகையில் பெரிய குடும்பங்களிலும் வறுமை நிலவவாய்ப்பு உண்டு. இதன் காரணமாக பத்துவயதான ஒரு சிறுவனை பெற்றோர் ஒரு தங்கியிருப்போராகக் கருதாமல் குடும்ப சுமையை

தாங்குகின்ற ஒரு உழைப்பாளியாகவே கருதுகின்றனர். இதனால் ஊழியச் சந்தைக்குள் தள்ளப்படுகின்றனர். பாடசாலை செல்லும் வயதில் தொழிற்சாலைகளுக்கும், வேறு கூலி வேலைகளுக்கும் செல்கின்றனர். இது அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையைச் சீர்குலையச் செய்கின்ற குடும்பசூழல் வகுத்தவழியாகும்.

பொருளீட்டும் எண்ணம்கொண்ட தனவான்களும், உதவும் கரங்கள் என்ற பெயரில் உலாவருகின்ற சில மோசடிக் கும்பல்களும், பொறுப்பற்ற பெற்றோருமே இவ்வாறு சிறுவர்களின் சிறகுகளை முறித்து கூண்டுப் பறவைகளாக்குகின்றனர். இதனால் எதிர்காலத் தலைவர்களாகவும், முன்னோடிகளாகவும் விருட்சங்களாக வளர வேண்டிய பல சிறுவர்கள் முளையிலேயே குழிதோண்டிப் புதைக்கப் படுகிறார்கள்.

மற்றும் சிறுவர் விபச்சாரம் என்பது இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அதிகமாக இடம்பெறுவதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். இதற்கு பெற்றோர்கள் ஆதரவாக இருப்பது எல்லோரையும் திடுக்கிடவைக்கின்ற ஒரு வேதனை தருகின்ற ஒரு விடயமாகும். இது பொறுப்பற்ற பெற்றோரின் குடும்ப சூழல் மூலம் சிறுவர்களுக்குவருகின்ற பாரியபிரச்சினையாகும்.

மேலும் மூன்றாம் மண்டல நாடுகளில் இராணுவ நடவடிக்கைக்காக சிறுவர்கள் சேர்க்கப்படுவதும் போராட்டங்களில் ஈடுபட்டு அவர்களுடைய உயிரை அழித்துக்கொள்வதும் பொறுப்பற்ற பெற்றோரினால் சிறுவர்க்குவருகின்ற பிரச்சினையாகும்.

இவையனைத்தும் மோசமான குடும்பசூழலின் காரணமாக சிறுவர்கள் அடைகின்ற துஸ்பிரயோகங்கள் அவர்களின் வாழ்வை சீர்குலைக்கின்ற நடத்தைகள். இவை மோசமான குடும்ப சூழலின் பிரதிபலிப்புகளே. இதனை யுனிசெப், யுனஸ்கோ, உலக சுகாதார ஸ்தாபனம் போன்றன கண்காணித்து வருகின்றது. இதன் விளைவாக பல சிறுவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே” எனவே அவர்களை நல்லவர்களாக

வாழவைப்பதும், தீயசெயல்களில் ஈடுபடவைப்பதும் குடும்ப சூழலின் தன்மையிலேயே தங்கியுள்ளது. எனவே சிறுவர்களுக்கு நல்ல குடும்பசூழலை உருவாக்கிக் கொடுப்பது பெற்றோரினதும் சமூகத்தினதும் பாரியபொறுப்பாகும். எனவே எதிர்கால தலைவர்களான சிறுவர்களுக்கு சிறந்த குடும்பசூழலை உருவாக்க இன்றே வழி செய்வோம். "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" எதிர்கால விருட்சங்களுக்கு வழி வகுப்போம்.

---



துணையாக இருக்க வேண்டிய நீங்கள் - எம்மை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்.

---

தற்கால வித்தாக இருந்து

எதிர்கால பயிர்களாக

விளையும் - பச்சிளம்

குழந்தைகளை

வதைக்காதீர் அன்பர்களே.



# சுனாமிக்குப் பிந்திய இலங்கையில் சமூக பராமரிப்பு நிலையங்களின் நிர்வாகம்

திரு.P.கலாதேவன்
சமூகசேவை உத்தியோகத்தர்,
மண்முனைப்பற்று.

இந்ததிட்டம் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தினால் [CIDA] நிதி உதவிவழங்கப்படுவதுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சுடன் [MSSSW] குயின்ஸ் பல்கலைக்கழகமும் இணைந்து அமுல்படுத்துகின்றது. சமூகசேவை செயற்பாடுகளை மீழமைக்கும் நோக்குடன் கொழும்பிலும் இலங்கையின் ஏனைய 08 இடங்களில் செயற்படுத்துவதுடன் மார்ச் 2009 இல் இதன் செயற்பாடு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. திட்டத்தின் இலக்கானது ஆற்றல் மேம்பாட்டினூடாக சுனாமிக்குப் பிந்திய இலங்கையில் சமூக மீழ்நிர்மாணமும் சமூகவாழ்வை உயர்மட்டத்திற்கு மீழமைத்தலுமாகும்.

இவ்செயற்திட்டமானது மூன்று கூறுகளினூடாக அமுல்படுத்தப்படும்.

**01. சமூக பராமரிப்பு நிலையங்களின் [SCC] வழிகாட்டல் இடங்கள்**

- இலங்கை மற்றும் கனடிய நிபுணர்களின் கூட்டிணைந்த கற்பித்தல்.
- 30 கற்பித்தல் குழுவினர் அடையாளம் காணப்பட்டிருத்தல்.
- 200 [SCC] உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டிருத்தல்.
- பயிற்சி நிகழ்ச்சிகளை உருவாக்குதலும் அமுல்படுத்தலும்.

**02. நிர்வாகம் மற்றும் கொள்கை**

- சகல கற்றல் வழங்களையும் பயிற்சிகளையும் மூன்று மொழிகளிலும் வழங்குதல்.
- SCC நிகழ்ச்சிக்கும் பட்டப்படிப்பிற்குமான கொள்கை சூழல் உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்த [MSSSW] உடன் பங்காளராதல்
- SCC இல் பொறுப்புவகிக்கும் ஏனைய அமைச்சுக்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்.
- இலங்கையில் சமூககொள்கை சூழல்பற்றிய புரிந்துணர்வை அதிகரித்தல்.
- SCC இன் அபிவிருத்தியில் ஈடுபடக்கூடிய Unicef Save the Children மற்றும் ஏனைய சர்வதேச தேசிய அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நல்லுறவை உருவாக்கல்.

**03. உயர்தர கல்வி**

- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் [NISD] மற்றும் [MSSSW] உடன் இணைந்து செயற்பாட்டுதிட்டமிடல் குழுவைக் கட்டி எழுப்பல்.
- பாடவிதானத்தை தயாரிப்பதற்கான செயலமர்வு தொடர்களை நடைமுறைப்படுத்தல்.

# சமூக பராமரிப்பு நிலையத்தினுடைய நோக்கங்களும், செயற்பாடுகளும்.

தொகுப்பு :
திரு.செ.சக்திநாயகம்
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் – மண்முனைப்பற்று.

சமூக பராமரிப்பு நிலையமானது சுனாமிக்குப் பிற்பட்ட இலங்கையில் சமூக அபிவிருத்தி என்பதனை மையமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். இவ்வமைப்பானது கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தினால் (CIDA) நிதியிடப்பட்டு குவீன்ஸ் பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப்படுகின்றது. சமூக பராமரிப்பு நிலையமானது உதவி பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு ஆகியவற்றின்கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து உதவிநாடிக்கென பணியாற்றும் ஒரு இடமாகவே அமைந்திருக்கின்றது. இலங்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அந்தஅடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, காத்தான்குடி, மண்முனைவடக்கு, செங்கலடி, வாழைச்சேனை போன்ற பிரதேசசெயலக பிரிவுகளில் சமூக பராமரிப்பு நிலையம் இயங்கி வருகின்றது.

**சமூக பராமரிப்பு நிலையத்தின் நோக்கங்கள் :**

☆ சமூகசேவையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் ஒரு அணியாக ஒன்றிணைந்து பணியாற்றுதல்.

☆ மக்களின் காலடியில் சமூகப்பணியினைக் கொண்டுசேர்த்தல்.

☆ உதவிநாடியினிடையே பணியடிப்படையிலான நல்லுறவைப் பேணல்.

☆ சமூகம் பராமரிக்கப்படவேண்டியது என்ற தேவையினை மக்களை வலுவூட்டல் மூலமாக உணரவைத்தல்.

☆ உதவி நாடியினுடைய பிரச்சினை, தேவைகளை சம்பவமாநாடு (Case Conference) மூலமாக ஆராய்ந்து பரிந்துரைகள் மேற்கொள்ளலும், சேவையினை வழங்குதலும்.

☆ சேவைநாடிகளுக்கு சேவையை இலகுவில் பெறக்கூடிய சூழலை (User Friendly Environment) உருவாக்கல்.

☆ ஒரு தரமான சேவையினை (Quality Service) வழங்கல்.

☆ ஒரு பராமரிப்பு நல்கும் சமூகத்தை உருவாக்கல்.

**சமூக பராமரிப்பு நிலையத்தினுடைய செயற்பாடுகள்**

☆ சமூக சேவை உத்தியோகத்தர்கள் மூலமான பணிகள்.

☆ சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மூலமான பணிகள்.

☆ முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமான பணிகள்.

☆ பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமான பணிகள்.

☆ உளவளத்துணை உத்தியோகத்தர் மூலமான பணிகள்.

இவ்வுத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சம்பவ மாநாடு (Case Conference) மூலமாக உதவி நாடியினுடைய தேவையினை நிறைவேற்றுவது தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளலும் சேவையினை வழங்குதலுமாகும்.

## உத்தியோகத்தர்களின் பணிகள்

**சமூக சேவை உத்தியோகத்தர்களின் பணிகள் :**

☆ பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கல்.

☆ நோய்க்கான கொடுப்பனவு வழங்கல்.

☆ ஊனமுற்றோர் தகவல் திரட்டுதல்.

☆ ஊனமுற்றோருக்கான உபகரணம் வழங்கல்.

☆ தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கல்.

☆ முதியோருக்கான அடையாள அட்டை வழங்கல்.

☆ முதியோர் சங்கங்கள், இல்லங்களை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

☆ வலுந்துதவு (தொண்டர்) அமைப்புக்களைப் பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

☆ சுயதொழிலுக்கான கொடுப்பனவு வழங்கலும், மேற்பார்வை செய்தலும்.

☆ இடம்பெயர்ந்தவர்களைப் பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

☆ ஊனமுற்றோருக்கான வீட்டு மானியக் கொடுப்பனவு வழங்கல்.

☆ கடும்பாதிப்புற்றோருக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கல்.

☆ ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை வழங்கல்.

**முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பணிகள் :**

☆ 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் தகவல் திரட்டுதல்.

☆ ஆரம்ப பாடசாலை தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்களுடனான இணைப்பை ஏற்படுத்தல்.

☆ ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்கு முன்பிள்ளை அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

☆ பிரதேச முன்பிள்ளைபருவ அபிவிருத்தி குழுஊடாக முன்பள்ளிகள் தொடர்பான அபிவிருத்திப் பணிகளைப் பரிந்துரை செய்தல்.

**சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரின் பணிகள் :**

☆ பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்பு குழு ஊடாக சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், பரிந்துரை செய்தல்.

☆ கிராம மட்டத்தில் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழுக்கள், சிறுவர் சமூக வட்டங்களை அமைத்து செயற்படல்.

☆ சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

☆ பிறப்பத்தாட்சிப் பத்திரமற்ற பிள்ளைகளுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

☆ வேலைக்கு அமர்த்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி மேல்நடவடிக்கைக்காக நன்னடத்தை திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல்.

☆ பாடசாலைவிட்டு இடைவிலகிய சிறுவர்கள் தொடர்பான தகவல் திரட்டுதலும், அவர்களை மீண்டும் பாடசாலைக்கு சேர்க்க வசதி செய்து கொடுத்தலும்.

☆ துஸ்பிரயோகத்துக்கு உள்ளான பிள்ளைகள் தொடர்பான புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

☆ மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் குடும்பங்களின் இரட்டைக் குழந்தைகளுக்கான திணைக்கள கொடுப்பனவு பெற்றுக்கொடுத்தல்.

☆ இடருக்கு/கடும் பாதிப்புக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான திணைக்கள கொடுப்பனவு பெற்றுக்கொடுத்தல்.

☆ சர்வதேச சிறுவர்தின வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

☆ சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினூடாக பெற்றோரை இழந்து மிகவும் பின்தங்கிய நிலையில்வாழும் பிள்ளைகளுக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

**உளவளத்துணை உத்தியோகத்தர்களின் பணிகள் :**

☆ உளரீதியாகப் பாதிப்புற்றோருக்கான உளவளத்துணை வழங்கல்.

☆ உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.


☆ உளவளத்துணை கிளினிக்குகளை நடாத்துதல்.

**பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது நிவாரண சகோதரியின் பணிகள் :**

☆ கிராம மட்டங்களில் பெண்கள் அபிவிருத்தி குழுக்களை அமைத்து செயற்படல்

☆ பெண்ணுரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல்.


## சமூக பராமரிப்பு நிலையம்



பிரதான வீதி, தாழங்குடா.
தொலைபேசி இல. - 065-5675001

# நன்றிகள்


- ஊக்கமளித்து வழிகாட்டி நெறிப்படுத்திய பிரதேச செயலாளர் **கலாநிதி சி.அமலநாதன்**, திட்டமிட்டு ஆலோசனை வழங்கி ஊக்கப்படுத்தி உதவிய உதவிப் பிரதேச செயலாளர் **திரு.கோ.தனபாலசுந்தரம்**
- துணைநின்று நல்லாலோசனை தந்த **கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர்**
- சர்வதேச சிறுவர்தின விழா சிறப்பாக நடைபெற இறுதிவரை பக்கபலமாய் நின்று உதவிய **பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்**, மற்றும் **சமூர்த்தி உத்தியோகத்தர்கள்**
- நிதி உதவி நல்கிய ***Save the Children - Batticaloa.***
- நிதி உதவி நல்கிய ***Caritas EHED, Batticaloa - Kalmunai.***
- சர்வதேச சிறுவர்தினப் போட்டிகள் நடாத்துவதற்கு உதவிய **கல்வித் திணைக்களம்,** பிரதேச கல்விப் பணிப்பாளர் **திரு.தா.நித்தியானந்தன், ஆசிரியர்கள், பங்குபற்றிய மாணவர்கள்**
- மலர் சிறப்புற, வாழ்த்துரை வழங்கிய **அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர், இராமகிருஷ்ண மிஷன் சுவாமி**
- **'விழி'** மலருக்கு பெறுமதிமிக்க ஆக்கங்கள் வழங்கிய ஆர்வலர்கள்
- விழா சிறப்பாக நடாத்துவதற்கு மண்டபம் தந்துதவிய **புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய அதிபர்**
- விழாவில் கலந்து சிறப்பித்த **பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர், பிள்ளைகள், ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள்**
- **'விழி'** மலரைச் சிறப்பாகப் பதிப்பித்த **'சண் அச்சகம்'** இருதயபுரம்
- மண்டப அலங்காரம், வரவேற்பு மற்றும் சகல வழிகளிலும் உதவிய **அனைத்து உள்ளங்களுக்கும்.**



**சிறுவர் கண்காணிப்புக்குழு**
**மண்முனைப்பற்று.**




Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
Arayampathy.
Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
Arayampathy.



நடிப்பு, நாடகம், பாட்டு, நடனம், சிற்பம், வைத்தியம், மந்திரம், கவிதை, நாதஸ்வரம், வில்லுப்பாட்டு என பல கலையும் வாய்த்த பல்கலைவேந்தர், கலாபூஷணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம்.

கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை முன்னாள் தலைவரும், கலை கலாசார பீட முன்னாள் பீடாதிபதியுமான பால சுகுமார் அவர்கள் கலை, இலக்கியம், விமர்சனம், நாடகம், கூத்து, ஆய்வு என பல தளங்களில் இயங்கி வருபவர்.



அண்மைக் காலமாக தன் மண் சார்ந்த ஆய்வு முயற்சிகளில் தீவிரமாக செயற்பட்டு வருபவர். திருகோணமலை மண்ணின் தொன்மங்களைத் தேடி பதிப்பிக்கும் முயற்சிகளில் இறங்கி உள்ள அவர் தனது அனாமிகா வெளியீட்டகத்தின் மூலம் இதுவரை இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

**பாலசுகுமார் மணிவிழா வெளியீடு - 01**

வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. 065 222 7170